

# என்ன சொல்கிறார் 'ஜோக்கர்' ராஜு முருகன்?



இதழ் 14
செப்டம்பர், அக்டோபர் 2016
தனிச்சுற்றுக்கு மட்டும்

# நீகரன்

மகாகவி பாரதியார் நினைவு நாள் செப்டம்பர் 12



*ஜாதி மதங்களைப் பாரோம் — உயர்*
*ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்*
*வேதிய ராயினும் ஒன்றே — அன்றி*
*வேறு குலத்தின ராயினும் ஒன்றே.*
*ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே — நம்மில்*
*ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே*
*நன்றிது தேர்ந்திடல் வேண்டும் — இந்த*
*ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?*

●

*நெஞ்சு பொறுக்குதில்லையே — இந்த*
*நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,*
*கொஞ்சமோ பிரிவினைகள்? — ஒரு*
*கோடி என்றால் அது பெரிதாமோ?*
*ஐந்துதலைப் பாம்பென் பான் — அப்பன்*
*ஆறுதலை யென்றுமகன் சொல்லி விட்டால்,*
*நெஞ்சு பிரிந்திடு வார் — பின்பு*
*நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்.*

●

*பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;*
*மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்*
*சொல்வதிலோர் மகிமை இல்லை;*
*திறமான புலமை யெனில் வெளிநாட்டார்*
*அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.*

●

# உடல் பிரிந்தும் உயிர்வாழும் இசை

**திருவுடையான்.** கரிசல் மண்ணின் இசைக்கொடை. பாடகர் மட்டுமல்ல நல்ல தபேலா வாத்தியக் கலைஞனும்கூட. பொறாமைப்படவைக்கும் கணீரென்ற வெண்கலக்குரல். கலைப்பணியோடு களப்பணியும் ஆற்றியவர். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின் திருநெல்வேலி மாவட்டச் செயலாளர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) யின் சங்கரன்கோவில் வட்டக்குழுவின் உறுப்பினர். எளிய நெசவுக் குடும்பத்தில் பிறந்தவர். அவரை நெருக்கமாக அறிந்தவர்கள் பலரும் போற்றும் எளிமை அவரது அடையாளம். அவர் விரும்பி உடுத்திய வேஷ்டி சட்டையைப் போலவே உள்ளமும் வெள்ளைதான்.

எட்டாம்வகுப்பு வரை படித்தவர். பின் தந்தையுடன் நெசவுத் தொழிலில் ஈடுபட்டார். ஓவியராக விளம்பரத் தட்டிகள் எழுதுவதும் அவரது மற்றொரு தொழிலாக இருந்தது. கோவில்களில் பக்திப்பாடல்கள் பாடிய அனுபவம் அவருக்கு இசைக் கலைஞராகப் பரிணமிக்க உதவியது. பின்பு தமிழ்நாடு முற்போக்கு

எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்துடன் ஏற்பட்ட தொடர்பினால், 1993 ஆம் ஆண்டு ம.தி.தா. இந்து மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கலைஇரவு நிகழ்ச்சியில் முதன் முதலாகப் பாட ஆரம்பித்தார். கரிசல் குயில்கள் இசைக் குழுவில் தோழர் கிருஷ்ணசாமியுடன் இணைந்து இசைத்தவர் பின்னர் தனியாக தனக்கென்று ஒரு குழுவை அமைத்து இசை உலா வந்தார். 'ஆத்தா உன் சேலை அந்த ஆகாயத்தப் போல' என்ற கவிஞர் ஏகாதசியின் பாடல் திருவுடையானின் குரலில் கேட்பவர் எவரது நெஞ்சத்தையும் கரைக்காமல் விடாது. 'தமிழா நீ பேசுவது தமிழா' என்ற உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தனின் பாடலும் இவரது குரலில் பிரசித்தம்.

சிதம்பரம் எஸ்.ஜெயராமன், டி.ஆர்.மகாலிங்கம், சீர்காழி கோவிந்தராஜன் குரல்களில் இசையமைப்பாளர் கங்கை அமரனின் இசைநிகழ்ச்சிகளில் பலமுறை பாடியிருக்கிறார். சீர்காழி கோவிந்தராஜன் குரலின் மீது இவர் கொண்டிருந்த ஈர்ப்பு காரணமாக சங்கரன்கோவிலில் இலங்கை வானொலி அறிவிப்பாளர் பி.எச். அப்துல்ஹமீது அவர்கள் தொகுத்து வழங்கிய பிரம்மாண்டமான இசை நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறார். நடிகர் பார்த்திபன் தனது 'கிறுக்கல்கள்' கவிதை நூல் வெளியீட்டின்போது இவரைப் பாடவைத்ததோடு, தனது 'இவன்' படத்திலும் இசைஞானி இளையராஜாவின் இசையில் ஒரு பாடல் பாட வாய்ப்பளித்தார். நடிகர் கமலஹாசனின் விருமாண்டி படத்தில் 'கருமாத்தூர் காட்டுக்குள்ளே' என்ற கூத்துப் பாடலில் இவரது குரலும் இருக்கிறது. இயக்குநர் தங்கர்பச்சானின் களவாடிய பொழுதுகள் படத்தில் இவர் பாடிய பாடல் இடம்பெற்றிருக்கிறது. வெளிநாட்டிலும் இசைநிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறார். பாரதி பாடல்களை இசைப்பேழையாக வெளியிட்டுள்ளார். இவரது முதல் இசைக் குறுந்தகடை இசையமைப்பாளர் கங்கை அமரன் வெளிட்டார்.

சேலம் நகரில் ஒரு கலை நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டுக் காரில் தனது தம்பியுடன் திரும்பிக் கொண்டிருக்கையில் பின்னிரவில் வாடிப்பட்டி அருகே நின்றுகொண்டிருந்த லாரியின் மீது கார் மோதியதில் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார். வெறுமனே கலை இலக்கியத்திற்காக என்றில்லாமல் கம்யூனிசம் என்னும் மகத்தான லட்சியத்திற்காகக் தன்னால் இயன்ற அளவிற்குக் களப்பணியாற்றிய அவரைப் போன்ற ஒரு கலைஞனை நிகரன் வாசகர்களுடன் இணைந்து நினைவு கூர்வது உள்ளபடியே பெருமைக்குறியது. உடலைப் பிரிந்த பின்னும் அவரிடமிருந்த வெளிப்பட்ட இசை மக்கள் மனதில் வெகுகாலத்திற்கு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் என்பது நிச்சயம்.



■

# சிலருடைய மனது அப்படி

அன்று ஞாயிற்றுக்கிழமை. ராஜபாளையத்தில் ஒரு புத்தக வெளியீட்டு நிகழ்வு இருந்தது. ஆலங்குளத்தில் இருந்து பேருந்தில் ஏறி இருக்கை தேடி அமர்ந்தேன். அருகில் திரும்பியபோது அந்த இருக்கையில் அருகில் அமர்ந்திருந்தவர் எழுத்தாளர் எஸ்.இலட்சுமணப்பெருமாள். ஒருவரையொருவர் நலம் விசாரித்துக் கொண்டோம். அவரும் அந்த நிகழ்ச்சிக்காகத்தான் பயணப்பட்டுக் கொண்டிப்பதாகச் சொன்னார். அவர் 1978-79களிலேயே எனக்கு அறிமுகமானவர்தான். ஆனால் அப்போதெல்லாம் இப்போது போல் பலராலும் அறியப்பட்ட எழுத்தாளரோ, பேச்சாளரோ இல்லை. அவரது 'கரிசல் நாட்டுக் கருவூலங்கள்' தொகுப்பை சமீபத்தில்தான் வாசித்திருந்தேன். நன்றாக இருக்கிறது என்றேன். நிகரன் எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது என்று விசாரித்தார். முன்பு நான் அவருக்குக் கொடுத்திருந்த இரண்டு இதழ்களை பத்திரமாக வைத்திருப்பதாகச் சொன்னார். வடிவமைப்பு நன்றாக இருக்கிறது என்று பாராட்டினார். படைப்புகளுக்குத்தான் பஞ்சமாக இருக்கிறது என்று சொன்னேன். வேண்டுமானால் எனது 'கரிசல் நாட்டுக் கருவூலங்கள்' தொகுப்பில் உள்ள கதைகளில் சிலவற்றை மறுபிரசுரம் செய்து கொள்ளுங்கள் என்றார். முடிந்தால் கட்டுரைகள்கூட எழுதி அனுப்புகிறேன் என்றார். "இதழ்களைத் தொடர்ந்து வீட்டு முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்றுகூட அவசியமில்லை, நிகழ்ச்சிகளில் பார்க்கும்போது கொடுத்தால்கூடப் போதும்" என்றார். அவருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டேன். நிகழ்ச்சிமுடிந்து ஊர்திரும்புகையிலும் ஒன்றாகவே பயணித்தோம். அவருடைய 'அதே மூத்தாளி' என்ற கதை இங்கே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆம்.. சிலருடைய மனது அப்படி. அதில்தான் அவர்கள் வாழ்கிறார்கள்.

■



# அதே மூத்தாளி

**எஸ்.இலட்சுமணப்பெருமாள்**

*(கரிசல் நாட்டுக் கருவூலங்கள் தொகுப்பிலிருந்து)*

சம்முகையாவுக்கும் கருப்பாயிக்கும் கல்யாணம் மூச்சி ரொம்ப வருசமா பிள்ள குட்டிங்கறதே இல்லே. பேர் சொல்ல ஒத்தப் பிள்ளை வேணுன்னு ஏறாத கோயிலில்லே வேண்டாத சாமியில்லே. அந்த பகவான் கண்ணெ தொறப்பானாங்காரு.

ஊருக்குள்ள இருக்கிற மனுசமக்க இவங்க ரெண்டுபேரை எதிர்க்க பார்த்தாலும் குறுக்கெ பார்த்தாலும் தாறுமாறா ஏசவும் பேசவுமா இருந்தாங்க. மலட்டுக் கழுதைக மொகரையில முழிச்சா விளங்குன மாதிரிதான் இன்னைக்கி நாளு தொலங்குன மாதிரிதான்... ன்னே விடிஞ்சதிலிருந்து அடையுற வரைக்கும் கண்ணுல காண்க விடாம பேசிப்பேசி ரணப்படுத்துனாங்க.

அந்த வெள்ளந்திகளும் எவ்வளவோ பொறுமையாத்தான் இருந்தாங்க. புருசனும் பெண்சாதியும் கழுதை மேய்ச்சாத்தான் பொழப்பு நடக்கும். இதுலே குறுக்கா மறுக்க தட்டுப்படாம இருக்க முடியுமா? சரி எவ்வளவுதான் பொறுமையா இருக்கிறது? வேற வழி தெரியல. ஒரு நா தேவையிலெ எல்லாக் கழுதையையும் கொண்டு போயி முடுக்கலாம்பட்டி கழுதைச் சந்தையிலே வித்துப் போட்டு துட்டுத் துக்காணியோட ஊரை விட்டே கிளம்பிட்டாங்க.

அப்படி கால்நடையா ரவ்வும் பகலும் நடந்து வந்துக் கிட்டிருக்கும்போது சந்தையில வித்திட்டு வந்த உருப்படிகள்ல ஒரு சின்ன பொட்டை கழுதை மட்டும் இவங்களுக்கு பிறத்தாடியே தொயந்து வந்துக்கிட்டிருந்ததை ஒரு வாரஞ் செண்டு பாத்து, அடியாத்தே! இந்த இம்புட்டு சீவனுக்கு நம்ம மேலே எம்பூட்டு கரிசனம். பிள்ளையில்லாத நமக்கு அந்த ஆண்டவன்தான் துணைக்குத் துணையா அனுப்பிச்சு வச்சிருக்கான். அப்படீன்னு அதுக்கு மூத்தாளின்னு பேருவச்சி அதை பொன்னம்போல பொத்தி பொத்தி வளத்துட்டு வந்தாங்க.

அவங்க அரைவயிறு கால்வயிறு குடிச்சிக்கிட்டாச்சும் மூத்தாளிக்கி எந்த குறைபாடும் இல்லாம பாத்துக்கிட்டாங்க. போற போற ஊர்கள்ல தெருத்தெருவா வீடுகள்ல போயி நேரா நேரத்துக்கு கழி தண்ணி கஞ்சின்னு வாங்கி வைக்க புல்லு புண்ணாக்குன்னு எந்த நேரமம் செழிக்க செழிக்க உன்க திங்க ஒரு குறைச்சலுமில்லே.

அதுவும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமா வளந்து அசல் கழுதையா ஆளாயிருச்சி.

இப்போ நாளுக்குநா சம்முகையாவுக்கும் கருப்பாயிக்கும் வரவர ரொம்ப கவலையாகிக்கிட்டே வந்தது. நமக்கோ பிள்ளையில்லே. இந்த மூத்தாளிய நல்ல முறையில் வளத்துச் செஞ்சு ஒரு வகை பண்ணி விட்டுட்டோமுன்னா பின்னாடி தவங்குன காலத்துக்கு ஆதரவா இருக்குமேன்னு பாத்தா கழுதைக்கு வயசாக வயசாக வல்லுசா கூறுபாடுங்கிறதே இல்லாம வளந்திருச்சோன்னுதான் கவலை.

விவரங்கெட்ட சின்னக்கழுதையா இருக்கும் போதெல்லாம் அவ்வளவு சாதுவா இருக்கும். இப்பொ என்னடான்னா காலையிலெ எந்திரிச்சு அன்பா ஆதராவா பா..பா.. றெக்.. றெக்.. றெக்குன்னு கூப்பிட்டு ரெண்டு பேத்துல யாரு கிட்டெ போனாலும் படீர் படீர்னு ஒரே உதை. பின்னால நின்னா உதைக்கிறது. முன்னாடி போனா கடிக்கிறது. சாயந்தரம் வரைக்கும் சந்தோசமா இருக்கும் காலையில அந்த புத்தி மாறிப் போகுது. கிட்டெ அண்ட விடாது. ஒரு ராத்திரிக்குள்ளே அப்படி என்ன நடந்து போச்சாம்?

வளத்தாளு வேத்தாளு தெரிய வேண்டாமா. சம்முகையா ஒரு நாளைக்கு மூணு தேறமாவது மூத்தாளியிட்டெ உதைபட்டு ஊட்டுக்குப்புற விழுந்து எந்திரிப்பான். சாம ஏமமெல்லாம் காலு காலுன்னு ஒரே கூப்பாடு. என்ன செய்ய நம்ம பிள்ளெய நாமலே வெளியே குத்தஞ் சொல்லிக்கிட்டு திரியவா முடியும்?

'நாமளும் கடிக்குக்கடி உதைக்கு உதைன்னு போனா பிறகு அந்தச் சின்னக் கழுதைக்கும் நமக்கும் என்ன வித்தியாசம். இன்னைக்கில்லாட்டா என்னைக்காவது அந்த ஆண்டவன் கழுதைப்பய புள்ளெக்கு நல்ல புத்தியை தரமாட்டானா'ன்னு சமாதானமாகிக்கிடுவாங்க.

பாடு பங்கெல்லாம் மறந்து சம்முகையா ராத்திரி கருப்பாயோட செத்த சந்தோசமா பேசுற நேரமா கத்தலா கத்தி கூப்பாடுன்னா கூப்பாடு இன்ன மட்டுமில்லெ. அவ்வளவுதான் சம்முகையா எந்திரிச்சி கருப்பாயியெ மிதிமிதின்னு மிதிப்பான். பிள்ளெய லட்சணமயிரா வளத்திருக்கே... நேரங்காலந் தெரியாமன்னு.

இப்படியா ஊரு ஊரா திரிஞ்சி கடைசியா ஒரு பள்ளிக் கூடத்துக்குப் பக்கமா வந்து சேந்தாங்க. கழுதைய ஒரு தூண்ல கட்டிப் போட்டதும் பள்ளிக்கூட திருணையிலே புருசனும் பெண்சாதியும் கொஞ்சம் அசந்தாங்க. அசதியிலே சம்முகையா கால் கருப்பாயி கால் மேல பட்டதுதான் தாம்சம் ரெண்டு நாளா நடையா நடந்தப்பொ சிவனேன்னு வந்த இந்தக் கழுதை கட்டுல நெல கொள்ளாம தூணைச் சுத்திச் சுத்தி ஓடுறதும் காலு காலுன்னு கத்தி கூப்பாடு போடுறதுமா ஒரே ரகளை பண்ணுனது.

உள்ளே படிச்சுக்கிட்டிருந்த பள்ளிக்கூடப் பிள்ளைகளெல்லாம் இது பண்ற அழிச்சாட்டியத்தைப் பாத்து அவங்களும் சந்தோசமா ஹோன்னு ஒரே இரைச்சலா இரையக் கூடிட்டாங்க. அந்தபள்ளிக்கூடத்து வாத்தியாரு ஒரு சாமியார். அவரை எல்லோரும் வாத்தியார்ச் சாமின்னுதான் கூப்புடுவாங்க.

வாத்தியாச்சாமி கையில பிரம்பு வச்சிக்கிட்டு உள்ளேயும் வெளியேயும் சுத்தி சுத்தி வந்த பையன்களை அதட்டுவாரோ.. கழுதைய அதட்டுவாரோ.. சமாளிக்க முடியல. சே! நம்ம புள்ளெ எவ்வளவோ தாவலை போலுக்கோன்னு சம்முகய்யாவும் கருப்பாயியும் எந்திரிச்சி உக்காந்துட்டாங்க.

அடேய் முட்டாப் பசங்களா நீங்கள்லாம் படிக்க வந்தவங்கதானா? அடங்காத பயகளா.. சொன்ன வார்த்தையை கேக்கறீங்களாடா? உங்களுக்கெல்லாம் சொல்லிக்கொடுத்து தொண்டைத் தண்ணியை விடுறதுக்கு பதிலா அந்தா அந்த கழுதைக்கு சொல்லிக் கொடுத்து அதை முன்னுக்குக் கொண்டு வந்துரலாம்டான்னார். பயல்கள் கேக்கிற மாதிரியில்லே. அவரால சமாளிக்க முடியல. மணியடிச்சு எல்லோரையும் வீட்டுக்கு போங்கடான்னு முடுக்கி விட்டுட்டு சம்முகையாவையும் கருப்பாயியையும் உங்களால பிள்ளைக படிப்புக் கெட்டுப் போச்சு மரியாதையா இடத்தை காலி பண்ணுங்கன்னார். அவங்க அதை காதுலேயே வாங்கிக்கிடலை.

நா ஒரு கல்யாணமாகாத பிரம்மச்சாரி என் வாயில விழுந்தா பலிக்கும். நாங் கெட்ட வாக்கு சொல்லம்முன்ன கிளம்பிடுங்கன்னு சொன்னதுதான் தாம்சம் புருசனும் பெண்சாதியும் அவரு கால்ல விழுந்தாங்க.

வாத்தியார்ச்சாமி வாத்தியார்ச்சாமி நாங்க கொஞ்ச நேரம் இங்கே தகிப்பாறிட்டு உடனே போற

மாதிரிதான் இருந்தோம். நீங்க சொன்ன ஒத்த வார்த்தைக்காகத்தான் அப்படியே திருணையிலெ உக்காந்திட்டோம். ஒரு வாக்குச் சொன்னாலும் திருவாக்கா சொன்னீங்க. எங்களுக்கு பிள்ளையில்லாத குறையை இந்தக் கழுதைதான் தீத்து வச்சது. இதை கண்ணுக்கு கண்ணா வளத்து வாரோம். ஆனா பாருங்க வயசுக்கு தக்கன அறிவிங்கிறதே இல்லாமப் போச்சு. வளத்தவங்களாச்சேன்னு தாட்சண்யமில்லாம எப்பப்பாரு உதை, கடி, கூப்பாடு, ஓட்டம். இத வச்சுக்கிட்டு அலப்பறையின்னா அலப்பறை.

"அது சரி அதுக்கு நான் என்னம்பேன்", என்றார் சலிப்பும் அதட்டலுமா வாத்தியார்ச்சாமி.

"நீங்கதானய்யா பயககிட்டெ சொன்னீங்க. உங்களைக் கட்டி மாரடிக்கிறதுக்கு அந்தக் கழுதைக்கு சொல்லிக் கொடுத்து ஆளாக்கிறலாமுன்னு. அதைமட்டும் செய்து கொடுத்திருங்க. ஜென்மா ஜென்மத்துக்கும் உங்களக் கோயில் கட்டிக் கும்பிடுவோம்." வாத்தியார் சாமிக்கு திகைப்பாகிப் போச்சு. என்னடா.. இது வம்பு! பயகளுக்கு ரோசம் வரடட்டுமேன்னு சொன்னா அத நெசம்னு நம்புதுகளே. அட கிறுக்குக் கழுதைகளா! இப்படியிருந்தா பின்னெ கழுதை கடிக்காம உதைக்காமலா இருக்கும்?

"இப்பொ ஒரு வார்த்தை சரின்னு சொல்லுங்க எங்க பிள்ளைய உங்ககிட்ட ஒப்படைச்சிட்டு சொடக்கு போடுறதுக்குள்ள நாங்க வெளியேறிப் போயிர்றோம். ஒண்ணில்லெ ரெண்டு வருசத்துல நாங்க வரும்போது அது

சேட்டையெல்லாம் போயி நாலு பேரு பாத்து இது இன்னாரு பிள்ளையா அப்படீன்னு மதிக்கிற மாதிரி அதை செம்ம பண்ணிறனும். இல்லேன்னா ஆயுசுக்கும் எங்களுக்கு இந்தத் திருணைதான்."

சம்முகையாவும் கருப்பாயியும் சுருண்டு படுத்துக்கிட்டாங்க. ஒண்ணுஞ் செய்ய முடியாம வாத்தியார்ச்சாமி கிடந்து முழிச்சாரு. நாளைக்கு பள்ளிக்கூடம் துவங்குறதுக்கு முன்னாடி காலையிலெ இவங்களை எப்படி வெளியேத்துறதுன்னு அன்னக்கி ராத்திரி பூராவும் இருட்டிலே உட்கார்ந்து யோசனை பண்ணுனார். திடீர்னு கழுதை காலு காலுன்னு கத்த ஆரம்பிச்சுது. எந்திரிச்சு திருணைப்பக்கம் வந்தார். அங்கே சம்முகையாவும் கருப்பாயியும் அன்னைக்குத்தான் சாந்தியாகிற பொண்ணு மாப்பிள்ளை மாதிரி ஆவல் ஆவலா கிடந்தாங்க. கழுதை நிலை கொள்ளாம கிடந்து தவிச்சது. அடி வயித்திலிருந்து குரலெடுத்து கத்திச்சு.

இதோட சத்தங்கேட்டு ரொம்ப தூரத்திலிருந்து ஒரு கழுதை சன்னக்குரல்ல துவங்கி அப்படியே கனமாய் ஏத்தி ஆரோகிச்சு ரொம்ப தாகத்துல கூச்சலாய் கூவி ஹெ.. ஹெ..ஹெ.. பர்ர்ர்ன்னு சன்னஞ்சன்னமா குறைச்சி முடியாம முடிச்சு வச்சது.

அவ்வளவுதான் அந்த எதுக்குரல் கேட்டு கட்டுத்தரையில் நிலை கொள்ளாம மூத்தாளி ஒரே களேபரமா வானத்துக்கும் பூமிக்கும் தாவுது. வாத்தியார்ச்சாமிக்கு புரிஞ்சு போச்சு. மெல்லப் போயி கழுதைப் பக்கமா நின்னார். அது அவரை நாக்கால் நக்கி கெஞ்சி தன் பரும் மூக்கால் அனலா பெருமூச்சு விட்டது. அவ்வளவுதான் வாத்தியார்ச்சாமி கால்கட்டை அவிழ்த்து விட்டுட்டார்.

மூத்தாளி குஷியும் கொண்டாட்டமுமா அவரை ஒரு சுத்து சுத்தி வந்து பின்னத்திங்கால்களால் ஒரு உதை கொடுத்துட்டு அழைப்புக்குரல்

கொடுத்த ஜோடியை நோக்கி ஓடிப்போனது. வாத்தியார்ச்சாமிக்கு பின்னாடியே போய்ப் பார்க்கணும் போலிருந்தது. பெண் கழுதைக்கு காதல் வந்திருச்சுன்னா ஆண் கழுதைய பின்னத்திங்காலால பொழுதனைக்கும் உதைக்குமாம். அதுக்குப் பிறகுதான் ஆண் கழுதை லகுவுக்கு வருமாம்.

வாத்தியார்ச்சாமியை பொறுத்த மட்டுல அது சரியாப்போச்சு. போயி விடிய விடிய வேடிக்கை பார்த்துட்டு காலையிலதான் வந்தார். வந்தவர் புருசன் பெண்சாதியைப் பாத்து உங்க பிள்ளையை பேரு சேத்தாச்சு நீங்க போயிட்டு பின்னால வாங்கன்னு முடுக்கி விட்டுட்டார்.

இவரு அன்றிலிருந்து தினசரி கழுதை வேடிக்கை பார்க்க போயிருவார். 'ஆமா பின்னே நாளைக்கு புள்ளிக்காரங்களுக்கு பதில் சொல்லணுமில்லே' என்று அவராய் சமாதானம் சொல்லிக்கிட்டார்.

ரொம்ப வருசமாகிப்போச்சு. சம்முகையாவும், கருப்பாயியும் அவங்க பிள்ளையைப் பாக்க வாத்தியார்ச்சாமியத் தேடி வந்தாங்க. அப்பொ ஊருக்குவெளியே ஒருத்தர் கூட்டமா கழுதைகளை வச்சி மேய்ச்சிக்கிட்டிருந்தார். அவருகிட்டெ வந்து இன்னின்ன மாதிரின்னு விபரஞ்சொல்லி விசாரிச்சாங்க.

கழுதை வேடிக்கை பாக்கப்போன வாத்தியார்ச்சாமி கடைசியில அவரும் ஒரு கல்யாணம் பண்ண வேண்டிய கட்டாயமாகிப்போச்சு. கழுதை குட்டிபோட, இவருக்கும் குழந்தை பிறக்க, அங்கே குட்டிபோட இங்கே குழந்தை பிறக்க இப்படியே குழந்தை குட்டி பெருத்துப் போயி வாங்குன சம்பளம் கட்டுபடியாகாம கடைசியில் வாத்தியார் வரும்படிக்காக பள்ளிக்கூடம் விட்ட நேரம் அந்தக் கழுதைகளை மேய்க்க ஆரம்பிச்சுட்டார். சாமி கோலமெல்லாம் மாறி அவருதான் கழுதை மேய்க்கிறார்ன்னு தெரியாம அவருகிட்டேயே வந்து விசாரிச்சாங்க. ஒத்தக் கழுதைய கொண்டு வந்து விட்டு தன்னை இந்த நிலைமைக்கு விட்டவங்களை சும்மா விடக்கூடாதுன்னு இதுகளுக்கு புத்திவரும்படியா செய்யணும்னு ஒரு வழி பண்ணுனார். அந்த ஊர் போலீஸ் ஸ்டேசன்ல கோபக்கார பொம்பளை இன்ஸ்பெக்டரா இருந்தா. ஏழை எம்பதி ஏப்பை சாப்பைகள்ன்னு தயை தாட்சண்யமில்லாம அடி உதைதான். இவங்களுக்கு அவதான் லாயக்குன்னு நீங்க வாத்தியார்ச்சாமிய பாத்து என்ன செய்ய உங்க பிள்ளை அறிவுக்கு அது சுயமா படிச்சு இந்த ஊர்ல இன்ஸ்பெக்டர் வேலை பாக்குது. இத பிடிக்காத வாத்தியார்ச்சாமி பொச்சரிப்பு எடுத்துப்போய் ஊரைவிட்டே போயிட்டாரு. உங்க பிள்ளையை உடனே போய்ப் பாருங்கன்னார்.

இவங்களுக்கு சந்தோசம்னா சந்தோசம் இன்னமட்டுமில்ல. "டேசன் எங்கிட்டிருக்கு சாமி", ன்னு கேட்டும் கேக்காம ஓடுனாங்க.

அந்த ஊர் டேசன் ஏட்டையம்மா வாத்தியார்ச்சாமிகிட்ட படிச்சவ. அந்த அம்மாகிட்டெ போயி நடந்த விபரமெல்லாஞ் சொல்லி லத்திக்கம்பாலே நாலு போடு போட்டு ரெண்டு பேரையும் ஊரைவிட்டு முடுக்கச் சொன்னார்.

இவங்க போன நேரம் இன்ஸ்பெக்டரம்மா நாலஞ்சு கேடிகளை அடியோ அடின்னு அடி விளாசிக்கிட்டிருந்தது. அப்ப பாத்து சம்முகையா டேசனுக்கு வெளியே நின்னு அந்த அம்மாளைப் பாத்து, "பா.. பா.. றெக்.. றெக்.. ஏ கழுதை மூத்தாளி.. அடையாளந் தெரியலையா.. பா.. பா.. நல்லா பாரு.. யாரு

வந்திருக்கேன்னு.. ஹெக்.. ஹெக்..” ன்னு முன்னால கைய நீட்டி தலைய ஆட்டி ஆட்டி கூப்பிட்டாப்புல.

இன்ஸ்பெக்டரம்மா கோபத்தோடு திரும்பிப்பாத்து இதுக என்ன கிறுக்குகளா.. ரோட்டுல அலையறதுக உள்ளே வந்துருச்சோன்னு பாத்தமட்டுல இருந்தா.

“இன்னும் அடையாளந் தெரியலையா.. ஏய் இங்கபாரு மூத்தாளி.. இந்தா.. உங்க ஆத்தா நிக்கா பாரு.. பா.. பா.. ”. தலையை மேலுங் கீழுமா ஆட்டி ஆட்டி கூப்புட கூப்புட கருப்பாயிக்கு சந்தேகமா இருந்தது. புருசனப் பாத்து “நம்ம புள்ளென்னா இந்நேரம் வரைக்கும் அடையாளந் தெரியாமலா இருக்கும்..?”, என்றாள்.

சம்முகையாவும் அதானே என்று யோசனையானான்.

அந்நேரம்பாத்து ஏட்டையாம்மா வந்து அவங்களப்பத்திச் சொன்னா. அவ்வளவுதான். கோபம் அண்டகாரம் முட்டிப்போயி, “ ஓகோ.. இவங்களுக்கு என்னப் பாத்தா அவங்க கழுதை மாதிரி தெரியுதோன்னு..” திடுதிடுன்னு ஓடி வந்து சம்முகையா அடப்பச் சேத்து ஓங்கி ஒரு மிதி வச்சாள் இன்ஸ்பெக்டரம்மா.

அப்படியே தூரப்போய் ஊட்டிக்குப்புற விழுந்த சம்முகைய்யா தடுமாறி எழுந்திருச்சி மூக்காந்தண்டியில ஒழுகுற ரத்தத்தை தொடச்சிக்கிட்டே பெண்சாதிய பாத்து சொன்னான் “ ஏம்மா.. கருப்பாயி.. சந்தேகமேயில்லே. இது நம்ம மூத்தாளியேதாம்மோய்!”.

■

**அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் மாநிலப் பொதுக்குழுத் தீர்மாணங்கள்**

- தமிழகத்தில் பரவி வரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திட வேண்டும்.மக்கள் நல்வாழ்வுத் துறையில் உள்ள அனைத்துக் காலிப் பணியிடங்களையும், கொசு ஒழிப்பு பணிக்கு போதிய ஊழியர்களையும் தமிழக அரசு நியமிக்க வேண்டும்.இந்தப் பணிகளுக்காக நியமிக்கப் பட்ட ஊழியர்களை இதர ப் பணிகளில் ஈடுபடுத்தக் கூடாது.
- மக்கள் விரோத புதிய கல்விக் கொள்கையை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும்.
- இந்திய மருத்துவக் கழகத்தை கலைக்கும் முயற்சியை மத்திய அரசு கைவிட வேண்டும்.மருத்துவக் கவுன்சிலை சீரமைத்திட, வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வைத்திட உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.
- தமிழகத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாக ஒதுக்கீட்டு மருத்துவ இடங்களுக்கும், தனியார் நிகர் நிலை மருத்துவப் பல்கலைக் கழக இடங்களுக்கும் தமிழக அரசே ஒற்றைச் சாளர முறையில் கேரள அரசை போல் மாணவர் சேர்க்கையை நடத்திட வேண்டும்.
- நாடு முழுவதும் தலித்துகள் , முஸ்லீம்களுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தும் பிற்போக்கு சக்திகள் மீது கடும் நடவடிக்கைகளை மாநில அரசுகள் எடுத்திட வேண்டும்.
- சிறுவாணி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் கேரளாவின் முயற்சியையும் , காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணைக்கட்டும் கர்நாடகத்தின் முயற்சியையும், பாலாறின் குறுக்கே தடுப்பணைக் கட்டும் ஆந்திர அரசின் முயற்சியையும் மத்திய மாநில அரசுகள் தடுத்து நிறுத்திட வேண்டும்.
- பெண்களுக்கு எதிரான கொலை வெறி தாக்குதல்களை தடுத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.
- இந்தி மற்றும் சமஸ்கிருதத்தை மத்திய அரசு திணிப்பதை கைவிட வேண்டும்.

# கணிதமும் விநோதமுமான புனைவு



வேலாயுதம் பொன்னுச்சாமி

சிலரது படைப்புகளுக்குள் நுழைவதற்கு சில தகவல்கள் தேவையாக இருக்கின்றன. ஜேம்ஸ் ஜாய்ஸ்சின் நாவலைப் படிக்க அயர்லாந்து தீவின் வரலாறு, அதன் தலைநகரமான டப்ளின் நகர தெருக்களைப்பற்றிய நிலவியல், கனவு மனோவியல் (Dream Psychology) சிறிது மொழியியல் பற்றி அறிவு தேவை என்கின்றனர். "ஒரு வேளை டப்ளின் நகரம் தனது வரலாற்று ஆதாரங்களை இழந்துவிட்டாலும் எனது யூலிஜஸ் நாவலைக் கொண்டு டப்ளினை மீளுருவாக்கம் செய்ய முடியும்", என்று திடமாகக் கூறியுள்ளார் ஜாய்ஸ்.

நகுலனை வாசிக்க நனவோடை உத்தி பற்றிய பார்வை தேவையாக இருக்கிறது. சிந்தனைச் சரடின் வழியை இம்மி பிசகாமல் தொடர்ந்து செல்வதும், தார்மீக ரீதியான மொழிநடையிலிருந்து வேறுபடுவதுமான அடிப்படைகளை அறிந்திருக்க வேண்டியுள்ளது.

இதுபோலவே ஜோர்ஸ் லூயி போர்ஹே என்ற அர்ஜென்டினா நாட்டு எழுத்தாளனின் சிறுகதைகளை வாசிக்க கண கணிதம் (Set Theory), வடிவ கணிதம் (Geometry), விநோதங்கள் (Fantacy) பற்றி சிறு புரிதல் தேவை என்கின்றனர் மேற்கத்திய விமர்சகர்கள். 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவ ஞானியான ஸ்பினோஸாவின் தத்துவங்களை அறிந்திருப்பது இன்னும் அதிகப்படியான புரிதலைக் கொடுக்கும் என்கின்றனர்.

ஒரு பொருளை அறிவாக்குவதற்கு குணரூபம் செய்ய வேண்டியுள்ளது. அப்பொருளின் தன்மையின் பண்புகளைக் கருத்தியலாக உருமாற்றம் செய்தே நாம் பொருட்களை அறிகிறோம். "அறிபொருள் என்பது ஒரு கருத்தாக்கம். வட்டம் என்ற கருத்தும் உண்மையான வட்டமும் வேறு" என்று ஸ்பினோசா தெளிவாக கூறுகிறார். சிந்தனை என்பது உற்பத்தி முறையால் உருவானது. அறிவு என்பது சிந்தனைக்குள் உருவானது. மனிதனுக்கும் உலகுக்கும் உள்ள உறவால் அறிவு உருவாவதில்லை. மனிதனுக்கும் உலகுக்கும் உள்ள உறவால் உண்டான சிந்தனையில் இருந்து உருவாவதே அறிவு. கோட்பாட்டின் தோற்றத்தில் இருந்தே அறிவு உருவாகிறது என்ற கருத்தை மார்க்சும் கொண்டிருந்தார் என்கிறார் அல்தூஸர், 'அல்முட்டாசிம் ஒரு அணுகல்' என்ற சிறுகதையில். புத்தகம் என்ற ஒரு பொருள் கற்பனையான ஒரு புத்தகம் என்ற கருத்தாக மாற்றப்பட்டு, அதன் உண்மை புத்தகத்தின் அனைத்துக் கூறுகளுடன் விளக்கப்பட்டு விமர்சனம் செய்யப்படுவதைப் போன்று புனைவாக்கியுள்ளார் போர்ஹே. புத்தகம் என்ற கருத்தாக்கமும் உண்மையான புத்தகமும் போர்ஹேயால் புனைவாக்கப்பட்ட உத்தியை உணரும்போது 'அட்முட்டாசிம் ஓர் அணுகல்' என்ற புனைவை இன்னும் கூடுதலாக உரையாடலுக்கு உட்படுத்த முடியும்.

போர்ஹே கண கணிதத்தை (Set Theory) புனைவுக்கு எப்படி உட்படுத்தி இருப்பார் என்று நிச்சயமற்று யூகித்துப் பார்க்க:
அ——என்ற கணத்தில் நல்லவன், குடிகாரன், லட்சியவாதி, பெண்பொறுக்கி, காரியவாதி என்ற குண பண்புகளைக் கொண்டவர்கள் இருக்க
ஆ——என்ற கணத்தில் போலி லட்சியவாதம் பேசும் பெண்பொறுக்கி, நல்லவன், ஜாதியவாதி, காந்தியவாதி, லட்சியவாதி என்ற குண பண்புகளை கொண்டவர்கள் இருக்க இவ்விரு கணங்களை இணைத்துப் (∪)பின் மீதுரும் குணங்கள் எவை: வெட்டுக்குப்(∩)பின் மீதுரும் குணங்கள் எவை என்பதை வகைப்படுத்தி அவற்றைக் கொண்டு கதாபாத்திரங்களையும், கதை முரணையும் வடிவமைத்து புனைவை நீடிக்கும் தன்மையை உணர்ந்தவராக போர்ஹே இருந்திருப்பதாக அறிய முடிகிறது. இது கட்டுரையாளனின் யூகம்தான்.

$E= mc^2$ என்ற சூத்திரத்தைப் பிரமிள் தன் கவிதைக்குத் தலைப்பாகக் கொண்டு எழுதிப் பார்த்திருக்கிறார். கணங்களில் பல வகைகள் சொல்லப்படுகின்றன. அவற்றிற்கு குண ரூபம் கொடுத்து இணைத்து∪, வெட்டி∩ப் பார்க்க புனைவு பெருக்கத்தைத் தியரியாக்கிப் பார்க்க முடியும் என்று தோன்றுகிறது. எழுத்து விளையாட்டு என்பதால். (தம்பி பெரியார் குமார் உங்களால் ஆர்க்கிமிடிஸ் கோட்பாட்டைக் கவிதையாக்க முடியும் என்ற எனது நம்பிக்கையை முன்வைக்கிறேன்.)

நம் மொழியில் வசப்படுத்தியிராத தொடர்பு எல்லைகளைத் தாண்டிய பகுதிகளை போர்ஹே புனைவாக்கி இருக்கிறார். தன்னைக் கனவு காணத் தெரிந்தவன் மட்டுமாகப் பிரக்ஞை பூர்வமாக உணர்ந்திருக்கிறார். யதார்த்தம், உளவியல், நனவோடை உத்திகளைத் தவிர்த்து அதீத விழிப்புணர்வால் தன் புனைவுகள் எழுதப்பட்டது என்கிறார். “எழுத்து வழிநடத்தப்படும் கனவு என்பதைத்தவிர, வேறு ஒன்றுமில்லை, ஒரு படைப்பாளி கனவுகளை பகுத்தறிவு கொண்டு அழித்துவிடக் கூடாது. கலை இதையல்ல நம்மிடம் எதிர்பார்ப்பது”, என்கிறார்.

ஒரு கருத்து எனக்குக் கிடைக்கும்போது அது ஒரு கதையாகலாம், கவிதையாகலாம். எனக்குக் கிடைத்திருப்பது தொடக்கமும் இறுதியும். இடையே நிகழ வேண்டியதை நான் கண்டறிய வேண்டும், இட்டுக்கட்ட வேண்டும் என்கிறார் போர்ஹே. (புதுமைப்பித்தன் இதனையே ‘ஒட்டி புளுகுதல்’ என்கிறார்.)

அடிப்படையில் கவிஞரான போர்ஹே காட்சி ரீதியான கவிதைகளை வெறுப்பதாகக் கூறுகிறார். ஒரு சொல்லில்கூட பிரபஞ்சத்தைத் தரிசிக்க முடியும் என்கிறார். (வாசிப்பதை சற்று விலக்கிவைத்து ‘திராட்சை’ என்ற சொல் அல்லது நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஒரு சொல்லைப் பின் தொடர்ந்து சென்று பிரபஞ்சத்தைத் தரிசிக்க முடியுமா என்று பார்ப்போமா?)

“கற்பனை உயிரிகள் பற்றிய புத்தகம்” என்ற, அகராதித் தன்மையில் தொகுக்கப்பட்ட புத்தகத்தில் பல வினோத மிருகங்களைப் பற்றி, குறிப்பாக இந்திய கிரேக்க, யூத, பௌத்த புராணங்களிலும், காஃப்கா, எட்கர் ஆலன்போ போன்ற புனைவெழுத்தாளர்களின் கதைகளில் வரும் வினோத மிருகங்களையும் பட்டியலிட்டு அவற்றின் வினோத பண்பகளைக் குறிப்பிட்டு

நூலாக்கியுள்ளார். வினோதங்கள் உண்மையையும், உலகையும் அறிய உதவும் எத்தனிப்புகள் என்கிறார். புனைவு என்பது பிரமையான உண்மை(illusionary reality)யை சாராமல் கவிதை நம்பிக்கை (poetical faith) சார்ந்து உருவாக வேண்டும் என்கிறார். பிரதியில் இருந்து பிரதி, பிரதிக்குள் பிரதி (inter textuality) என்று பின்நவீனத்துவம் இன்று பேசுவதை முன்பே உணர்ந்து எழுதிக்காட்டியவர் போர்ஹே. ஒரு பிரதிக்கு ஆயிரக்கணக்கான அர்த்தங்கள் இருக்க முடியும் என்கிறார். ஒவ்வொரு தலைமுறையும் கடந்தகால கவிதைகளை, கதைகளை திரும்ப எழுதிப் பார்க்கிறது. பலமுறை எழுதப்பட்ட கவிதைகளைத்தான் நானும் எழுதுகிறேன். மறு கண்டுபிடிப்பு செய்வது மட்டுமே என் வேலை என்கிறார். தனி பிரதி மட்டுமல்ல, தனி மனிதர்களும் சாத்தியமில்லை எனும் நோக்கு கொண்டவராக இருந்ததால், கதைகளுக்குள் கதை, ஒருவருக்குள் ஒருவர் ஊடுருவல், பல நான்கள், பல தன்னிலைகள், கால பிறழ்வு, இடப் பிறழ்வு, ஒரு நூல் மற்றொரு நூலில் முடிவடைதல், ஒரு நூல் மற்றொரு நூலில் இருந்து ஆரம்பமாதல் என்று எழுதிப் பார்த்தலின் அதிகபட்ச சுதந்திரத்தை அனுபவித்துள்ளார். மாய யதார்த்தத்தின் நவீன எழுத்து போர்ஹேயில் இருந்து தொடங்குகிறது என்று கணிக்கப்படுகிறது.

*வரலாற்றினை தூசியாக்குவேன்,*
*தூசியின் தூசியாக.*
*நான் இப்போது*
*இறுதி சூரியாஸ்தமனத்தை*
*பார்க்கிறேன்.*
*கடைசிப் பறவையின்*
*குரலினைக் கேட்கிறேன்.*
*நான் ஒன்றுமின்மையை எவருக்கும்*
*கையளித்துச் செல்லவில்லை.*

**- ஹோர்ஹே லூயிஸ் பேர்கெஸ்.**

*என்னங்க சார் உங்க சட்டம்?*
*என்னங்க சார் உங்க திட்டம்?*
*கேள்வி கேட்க ஆளில்லாம*
*போடுறீங்க கொட்டம்!*

*நூறு கோடி மனிதரு*
*யாரு யாரோ தலைவரு*
*ஓட்டு வாங்கிப் போற நீங்க*
*ஊழலோட டீலரு!*

*ஆண்ட பரம்பர கைநாட்டு*
*ஆட்டி படைக்குது கார்ப்பரேட்டு*
*நாட்ட விக்கிற மந்திரிமாருக்கு*
*நல்லா வைய்யி சல்யூட்டு!*

*ரேஷன் அரிசி புழுவுல*
*வல்லரசு கனவுல*
*தேசம் போற போக்க பாத்தா*
*தேறாதுங்க முடிவுல!*

*கருத்து சொல்ல முடியல*
*கருப்பு பணமும் திரும்பல*
*ஆளுக்காளு நாட்டாமதான்*
*பார்லிமெண்ட்டு நடுவுல!*

*சொகுசுகாரு தெருவுல*
*வெவசாயி தூக்குல*
*வட்டிமேல வட்டிபோட்டு*
*அடிக்கிறீங்க வயித்துல!*

*கையில் போனு ஜொலிக்குதா?*
*ஓசியில் டி.வி.யும் கெடைக்குதா?*
*அவசரமா ஒண்ணுக்கும் ரெண்டுக்கும்*
*ஒதுங்க எடமும் இருக்குதா?*

*இயற்கை என்ன மறுக்குதா?*
*எதையும் உள்ள பதுக்குதா?*
*எல்லாத்தையும் சூறையாட*
*சர்க்கார் கூட்டிக் கொடுக்குதா?*

*நல்ல தண்ணி கெடைக்கல*
*நல்ல காத்து கெடைக்கல*
*அரசாங்க சரக்குலதான்*
*கொல்லுறீங்க சனங்கள!*

● **யுகபாரதி**
(‘ஜோக்கர்’ திரைப்படத்தில்)

நினைவுக்குறிப்புகள்

# திரைப்படக் கடல்:

## என் மேல் தெறித்து விழுந்த சில துளிகள்



குறிஞ்சிச் செல்வர்
கொ.மா. கோதண்டம்

**நா**ற்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு சிறுவர் பாடல் நூல் 'சின்னச்சின்ன அரும்புகள்' எழுதி வெளியிட்டேன். அதில் ஒரு பாடலின் முன் பகுதி

"என்ன ஏன் எதற்கு
எங்கே எப்படி என்று
சின்னத் தம்பி கேளு
சிறந்த கேள்விகள் கேளு".

சில மாதங்கள் கழித்து திரைப்பட இசையமைப்பாளரும் பாடலாசிரியருமான எம்.பி.சீனிவாஸ் என்பவரிடமிருந்து கடிதம் வந்தது.

"வணக்கம் நான் இசை நிகழ்ச்சிகளில் பாடி வருகிறேன். சென்னையில் பல பள்ளிகளில் சிறுவர்களுக்குப் பாடல்கள் சொல்லித் தருகிறேன். உங்கள் பாட்டை நான் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வேண்டும்" என்று.

நான் பதில் எழுதினேன். "வணக்கம். நான் எழுதிய நோக்கத்தை செயல்படுத்த அனுமதி தேவையா? செய்யுங்கள். மிக்க நன்றிகள்" என்று.

சில மாதங்கள் கழித்து அவரிடமிருந்து மேலும் ஒரு கடிதம் வந்தது.

"வணக்கம். நான் சிறுவர்களுக்காக சேர்ந்து பாடுவோம் என்ற தலைப்பில் ஒரு திரைப்படம் எடுக்கிறேன். படத்தில் உங்கள் பாடலை சேர்த்துக் கொண்டேன். சன்மானமாக இத்துடன் நூறு ரூபாய் அனுப்பியுள்ளேன்" என்று. எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நூறு ரூபாய்க்கு அப்போது ஒரு பவுன் தங்கம் வாங்கலாம்.

இங்கே, ராஜபாளையத்தில் அப்போது இசை சபா செயல்பட்டது. கலைமன்றத்தில் மாதா மாதம் நாட்டின் முன்னணி இசைப்பாடகர்கள் நிகழ்ச்சிகள் நடக்கும். தவறாமல் கேட்டு மகிழ்வேன். டி.கே.எஸ். குழுவினரின் நாடகங்கள், மனோகர் குழு நாடகங்கள், சிவாஜி கனேசன் நாடகங்கள். யாவுமே கண்டு களிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

நான் நூலக வராண்டாவில் படித்துக் கொண்டிருப்பேன். நாடக நடிகர்கள் மதிய வேளையில் படிக்க வருவார்கள். பேசிக்கொண்டிருப்பேன்.

சகலகலா வல்ல கலைஞன் கமலின் குடும்பத்தினர் தேச விடுதலைப் போரில் பங்கு கொண்டவர்கள். கமலின் தந்தை தியாகி குமாரசாமி ராஜாவைப் பார்க்க பல தடவைகள் வந்துள்ளார்கள்.

ஒரு சமயம் கமலின் தாயாரும் வந்திருந்தார்கள். அவர்கள் உள்ளே பேசிக் கொண்டிருந்த போது கமலின் தாயார் திண்ணையில் அமர்ந்து என்னிடம் நகரில் நடந்த விடுதலைப் போர் பற்றி விசாரித்தார்கள்.

கமலின் சகோதரியார் நளினாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் இங்குதான் நடந்தது. பெருங்கூட்டம். சிறுவன் கமலும் சிவன் வேடத்தில் ஒரு காட்சியில் கலந்து நடனம் ஆடினார். நடனத்தின் கலை நுட்ப அழகை அனைவரும் பாராட்டினார்கள். நளினாவுக்கு விருதாக தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டது. சிறுவன் கமல் தனக்கும் பதக்கம் வேண்டும் என அடம்பிடித்தார்.

சபா செயலர், நூலகர் என்.எஸ்.முத்துகிருஷ்ணராஜாவிடமும் என்னிடமும் கமலை சமாதானம் செய்ய வேண்டினார்கள். அந்த அற்புத கலைஞரின் முன்னேற்ற ஆர்வம் இன்று சுடர்விட்டுப் பிரகாசிப்பதைப் பார்க்கையில் சின்ன வயதிலேயே அவர் ஆர்வமும், அம்மாவும் நீயே அப்பாவும் நீயே பாடலின் முகபாவமும் கண்முன் நிற்கிறது.

பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்திரராஜன் அவர்கள் இங்கே சில தடவை நிகழ்ச்சி நடத்தினார்கள். அவரது குரல்வளம் நெஞ்சில் நிற்கும். நிகழ்ச்சி முடிந்து இரவில் கலைமன்ற மாடியில் தங்கினார்கள். துணைக்கு நான். இரவெல்லாம் இசை பற்றியும், சினிமாத் துறை பற்றியும் என்னிடம் நிறைய செய்திகள் பேசினார்கள். அப்பப்பா!

அப்போது ஒரு நண்பர் தன்னை நடிக்க வாய்ப்பு தருமாறு கேட்டு வந்தார்.

“என் மகனே கேட்டாலும்கூட பாழும் கிணற்றில் தள்ளுவேனே ஒழிய சினிமாவில் சேர்க்க மாட்டேன். போ..போ.. வேண்டவே வேண்டாம்” என்று கூறிவிட்டார் டி.எம்.எஸ்.

என் கவிதைகள் உலக அளவில் பரிசுகள் பெற்றவை. படித்த நண்பர்கள் பலர்.

“நீங்கள் சினிமாவில் பாட்டெழுதப் போகலாமே” என்பர். நண்பர் மருத்துவ அறிவியல் எழுத்தாளர் டாக்டர் கு.கணேசன் அடிக்கடி கூறுவார் “பேசாமெ சென்னை போயிரும். சினிமாவில் பாட்டெழுதலாம்” என்று.

எத்தனை இளைஞர்கள் பாட்டெழுத வரிசையில் பட்டினியோடு காத்திருக்கிறார்கள் என்பது நாம் அறியாததா. பாடகர் டி.எம்.எஸ் அவர்களின் வார்த்தைகளும் என் மனதில் இருக்கிறதே.

இப்போதும் பல நண்பர்கள் “என் அண்ணன் துணை இயக்குநராக இருக்கிறார். உங்களைப்பற்றி கூறியுள்ளேன். பெரியவர் வேடத்தில் உங்களை நடிக்க ஏற்பாடு செய்வதாக கூறியுள்ளார்” என்பார்கள்.

ஒரு நண்பர் கூட்டத்திலேயே இப்படி அறிவித்தார். “என் தம்பியின் அடுத்த படத்தில் ஐயா நடிப்பார்” என்று.

அண்மையில் ராஜபாளையத்தில் பல படங்கள் படப்பிடிப்புகள் நடந்தன. சிலர் அழைத்தனர். “வாங்க உங்களை அறிமுகப்படுத்தி வைக்கிறோம்” என்று. எனக்கு விருப்பமில்லை.

ஒரு சமயம் இயக்குநர் பாலச்சந்தர் வானதி பதிப்பகத்தில் பேசிக்கொண்டிருந்தார்.

வானதி ஐயா அவருக்கு என்னைப் பற்றிக் கூறி அறிமுகம் செய்து வைத்தார். உடனே பாலச்சந்தர் என் நூல்களைக் கேட்டார். நானும் இரண்டு நாவல்களைத் தந்தேன்.

"படித்துவிட்டு வாய்ப்பிருந்தால் பேசுகிறேன்" என்றார்கள்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் சிட்டாடல் வீடியோ கம்பெனியிலிருந்து என்னைத் தேடி மானேஜர் வீட்டுக்கு வந்துள்ளார். நான் ஊரில் இல்லை. மறுநாள் நான் வந்ததும் என்னைப் பார்க்க வந்தார்.

"சினிமா எடுக்க உங்கள் கதை நூல்களைத் தாருங்கள். உங்களைப் பற்றியும் உங்கள் கதைகள் பற்றியும் கேள்விப்பட்டு வந்துள்ளேன்" என்றார்.

நான் என் இரண்டு நாவல்களைத் தந்தேன். இரண்டாயிரம் ரூபாய் அட்வான்ஸ் தந்து ஒப்பந்தம் எழுதி கையெழுத்தும் ஆனது. "முடிந்தால் நீங்களும் நடிக்கலாம்" என்றார். அந்த ஆர்வத்தில் பத்திருபது நூல்களை அன்பளிப்பாகவும் தந்தனுப்பினேன்.

சென்னை சென்று 91 ஜனவரியில் கடிதம் எழுதினார். "உங்கள் கதைகள் தேர்வாகிவிட்டன. கூடிய சீக்கிரம் செய்தி வரும். நீங்களும் விரும்பிய பாத்திரத்தில் நடிக்கலாம்"என்று. கடிதம் உள்ளது. ஒப்பந்த பத்திரம் கண்ணில் படவில்லை.

ஓராண்டு கழித்து சென்னை சென்றபோது அந்த விலாசம் தேடிச் சென்றேன்.

"உங்கள் கதைகளைப் படம் எடுப்பதில் உங்களைவிட எங்களுக்கே ஆர்வம். சீக்கிரம் எடுப்போம்" என்று கூறி அனுப்பி வைத்தனர். விசாரித்ததில்- அந்தக் காலத்தில் தியாகராஜபாகவதர், சின்னப்பா ரசிகர்களிடையே போட்டி இருந்ததைப் போல, எம்.ஜி.ஆர், சிவாஜி ரசிகர்களிடையே போட்டி போல, இசைத்துறையில் செம்மங்குடி சீனிவாசய்யர், செம்பை வைத்தியநாதய்யர் கச்சேரிகளில் போட்டி போல, படம் எடுப்பதில் செவன்த் சேனல் அமைப்புக்கும் சிட்டாடல் அமைப்புக்கும் போட்டியாம். அடுத்தவர் எழுத்தாளர்களிடையே கதைகள் வாங்கி செவன்த் சேனல் படம் எடுக்கப் போகிறார்கள் என்பது அறிந்து நாம் எடுக்கப் போகிறோமோ இல்லையோ அவர்களை விடக்கூடாது என்ற நோக்கில் தமிழ்நாட்டில் நல்ல கதைகள் எழுதுபவர்களைப்பற்றி விசாரித்து, பலரிடமும் நேரில் சென்று கதைகளை வாங்கி அட்வான்ஸ் தந்து (நட்டமானாலும் பரவாயில்லை என்று) ஐம்பது அறுபது எழுத்தாளர்களிடம் இப்படி வாங்கிப் போனது தெரிந்தது.

புத்தம் வீடு நாவல் எழுதிய சகோதரி ஒரு இதழில் பேட்டி அளித்திருந்தார். "என் படத்திற்கான பணம் கிடைத்ததும் ஒரு பள்ளிக்கூடம் கட்டப் போகிறேன்" என்று. என்னை உள்பட எத்தனை எழுத்தாளர்களை இவர்கள் கனவு காண வைத்தார்களோ? வாழ்க அவர்கள்!

ஒரு சமயம் எங்கள் ஊரில் பாவலர் வரதராஜன் பாடல் நிகழ்ச்சி நடந்தது. புதுப்பாளையம் மாரியம்மன் கோவில் அருகே மேடை.

வரதராஜனும் பெண்குரலுக்கு அவர் தம்பி சின்னவயது இளையராஜாவும் வந்திருந்தார்கள்.

நிகழ்ச்சிக்கு நேரம் இருந்ததால் கொண்டன் ஏரி கண்மாய் கரை வழியே சம்பந்தபுரம் வரை நானும் பாவலரும் இளையராஜாவும் பேசிக்கொண்டே போய் திரும்பி வந்தோம். பின் கச்சேரி நடந்தது. ■

மரணம் பற்றிய வதந்தி வந்தது
திருஷ்டி கழிந்தது என்றார்கள்
தீர்க்காயுசு என்றார்கள்
படபடத்தோம் என்றார்கள்
நான் எழுதிய கவிதையைச்
சொன்னேன்
நான் இறந்ததை அறிந்த பிறகே
நான் இறந்து போக வேண்டும்

**நா.முத்துக்குமார்**



# பாதியில் முடிந்து போன ஒரு பாட்டு

இலக்கிய வீதியில் பட்டாம்பூச்சி விற்றுக்கொண்டிருந்த நியூட்டனின் மூன்றாம் விதி. ஹைக்கூவை அனிலின் முதுகில் கிறுக்கி முன்றிலில் ஆடவிடும் ஆனந்த யாழ். எழுத்துக்களை இசைக்குள் இழுத்துப்போட்டு காற்று வெளியில் கவிதை விதைக்கும் காஞ்சிக் கவிஞன் பிறந்தது காஞ்சிபுரம் மாவட்டம் கண்ணிகாபுரம். சிறு வயதிலேயே தன் தாயாரை இழந்த நா.முத்துக்குமாரிடம் நூல்களைக் காட்டி நடை பழக்கினார் இவரது தந்தையார் நாகராஜன். பச்சையப்பன் கல்லூரியில் பயின்று தமிழைத் தாயாகப் பற்றிக் கொண்ட இந்த இளவலை இலக்கிய உலகம் உள்வாங்கிக் கொண்டது. புத்தகங்களின் பக்கத் துணையுடன் சென்னைக்குப் புலம் பெயர்ந்த நா.முத்துக்குமார் ஒளி நெறிக் கவிஞன் பாலுமகேந்திராவின் வெள்ளித்திரைப் பள்ளியில் இயக்கம் பயின்றார். நான்கு ஆண்டுகள் உதவி இயக்குநராகப் பணியாற்றினார்.

எழுத்துக்களுக்குப் பன்முகங்களைப் பொருத்தி அழகு பார்க்கும் கலை இயல்பாகவே இவருக்கு கைவந்தது. பட்டாம் பூச்சி விற்பவன், நியூட்டனின் மூன்றாம் விதி, அனா ஆவன்னா, என்னைச் சந்திக்கக் கனவில் வராதே, வேடிக்கை பார்ப்பவன், குழந்தைகள் நிறைந்த வீடு,அனிலாடும் முன்றில், கிராமம் நகரம் மாநகரம், என்ற தலைப்புகளில் கவிதை, கட்டுரை, ஹைக்கூ, புதினம் என வாழ்வியல் அனுபவங்களை உலவவிட்டார். இந்தப் படைப்புகள் எல்லாம் அனுபல்லவிகளாக அமைய பல்லவி தந்து உதவுமாறு காட்சி ஊடகம் இவரைப் பல்லக்கு வைத்து அழைத்தது. 73 அபிபுல்லா சாலையில் அவன் பாடல் எழுதுவதற்குப் பயிற்சி கொடுத்தார் கவிஞரும் பாடலாசிரியருமான அறிவுமதி. இயக்குநர் சீமானின் வீரநடை படத்தில் அவரது முதல் பாடல் ஒலித்தது. காற்றலையில் அதிகமாக உலாவரும் இவரது அநேகம் பாடல்கள் இசைவடிவம் பெற்ற இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

பாடல் வரிகளுக்காகவும் இளைஞர்கள் பாடல்களை ரசிப்பார்கள் என்ற ஒரு ரசனை மாற்றத்தை புதிய தலைமுறையிடம் கொண்டுவந்தவர். நவீன கவிதை இலக்கியங்களுக்கும் திரைப்படப் பாடல்களுக்குமான இடைவெளியைக் குறைத்தவர் என்று போற்றப்படுபவர். காட்சிக் கவிதைகளை அங்கீகரிக்க இரண்டு தேசிய விருதுகள் இவரைத் தேடி வந்தன. தங்கமீன்கள் படத்திற்காக இவர் எழுதிய 'ஆனந்த யாழை மீட்டுகிறாய்' என்ற பாடலுக்காகவும், சைவம் படத்திற்காக இவர் எழுதிய 'அழகே அழகு' என்ற பாடலுக்காகவும் இருமுறை தேசிய விருது பெற்றிருக்கிறார். இலக்கிய உலகில் நிறைகுடமாய் நடைபோட்டு வந்த இந்த இளவலுக்கு இலக்கியத்திற்கான தமிழன் விருது வழங்கிப் பெருமைப் பட்டுக் கொண்டது புதிய தலைமுறை. காதலர்கள் தங்களுக்குள் பரிமாறிக்கொள்ள அதிகம் பயன்படுத்தியது இவரது பாடல் வரிகளைத்தான். இதயங்களை வருடிய பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர். மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்ட இவரது இதயம் தனது 41வது வயதில் ஆகஸ்டு 14, 2016 அன்று துடிப்பதை நிறுத்திக்கொண்டது. கொண்டாடக்கூடிய நினைவுகளைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார் நா.முத்துக்குமார். அதில் ஒன்றுதான் தன் மகனுக்கு அவர் எழுதிய இந்தக் கடிதம்.

அன்புள்ள மகனுக்கு அப்பா எழுதுவது

இது நான் உனக்கு எழுதும் முதல் கடிதம் இதைப் படித்துப் புரிந்து கொள்ளும் வயதில் நீ இல்லை. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டு இருக்கிறாய்.. வயதின் பேராற்றங்கரை உன்னையும் வாலிபத்தில் நிறுத்தும். சிறகுமுளைத்த தேவதைகள் உன் கனவுகளை ஆசீர்வதிப்பார்கள். பெண் உடல் புதிராகும். என் தகப்பன் என்னிடமிருந்து ஒளித்து வைத்த ரகசியங்கள் அடங்கிய பெட்டியின் சாவியை நான் தேட முற்பட்டதைப் போல நீயும் தேடத் தொடங்குவாய். பத்திரமாகவும் பக்குவமாகவும் இருக்கவேண்டிய பருவம் அது. உனக்குத் தெரியாதது இல்லை. பார்த்து நடந்து கொள். நிறைய பயணப்படு. பயணங்களின் ஜன்னல்களே முதுகுக்குப் பின்னாலும் இரண்டு கண்களைத் திறக்கின்றன. புத்தகங்களை நேசி. ஒரு புத்தகத்தைத் தொடுகிறபோது நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகங்களின் காட்டில் தொலைந்தவர்கள். உன் உதிரத்திலும் அந்தக் காகித நதி ஓடிக்கொண்டே இருக்கட்டும். கிடைத்த வேலையைவிடப் பிடித்த வேலையை செய். இனிய இல்லறம் தொடங்கு. யாராவது கேட்டால் இல்லை எனினும் கடன் வாங்கியாவது உதவி செய். அதில் கிடைக்கும் ஆனந்தம் அலாதியானது. உறவுகளிடம் நெருங்கியும் இரு. விலகியும் இரு. இந்த உலகில் எல்லா உறவுகளையும்விட மேன்மையானது நட்பு மட்டுமே. நல்ல நண்பர்களை சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும். இவையெல்லாம் என் தகப்பன் எனக்கு சொல்லாமல் சொன்னவை. நான் உனக்கு சொல்ல நினைத்துச் சொல்பவை. என் சந்தோஷமே நீ பிறந்த பிறகுதான். என் தகப்பனின் அன்பையும் அருமையையும் அடிக்கடி உணர்கிறேன். நாளை உனக்கொரு மகன் பிறக்கையில் என் அன்பையும் அருமையையும் நீ உணர்வாய். நாளைக்கும் நாளை நீ உன் பேரன் பேத்திகளுடன் எங்கோ ஓர் ஊரில் கொஞ்சிப் பேசி விளையாடிக்கொண்டு இருக்கையில் என் ஞாபகம் வந்தால், இந்தக் கடிதத்தையும் எடுத்துப் படித்துப் பார். உன் கண்களில் இருந்து உதிரும் கண்ணீர்த் துளியில் வாழ்ந்து கொண்டிருப்பேன் நான்.

இப்படிக்கு, உன் அப்பா..

நா.முத்துக்குமார்.

■



# நாளை ஒரு போராட்டம் வீதிக்கு வா தோழா

(ஜோக்கர் பட இயக்குநர் ராஜூ முருகன் அவர்களின் கருத்துக்கள் அடங்கிய சிறு தொகுப்பு. தனியார் காட்சி ஊடகங்களுக்கு அவர் அளித்த சில நேர்காணல்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டது.)

என்னுடையது திருவாரூர் மாவட்டம் அபிவிருத்திசாரம் என்ற கிராமம். பிரிக்கப்படாத தஞ்சாவூர் மாவட்டம் என்பது முழுக்க கம்யூனிச தாக்கம் உள்ளது. பெருமளவிற்கு விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிறைந்து இருப்பதால் கடந்த ஒரு நூறு வருடங்களாகவே இடதுசாரி இயக்கங்களின் தாக்கம் அதிகமாக உள்ள இடம். அந்த ஒரு மூவ்மென்ட்ல என்னுடைய அண்ணன் சரவனன்னு ஒருத்தர், அவரு இப்ப இந்த ஜோக்கர் படத்துல இணை இயக்குநராக இருப்பவர், கரந்தை தமிழ் சங்கத்தில எம்.பில் தமிழ் படித்தவர், அவர் மூலமா எனக்கு இலக்கியங்கள் நிறைய பரிச்சயமானது. அவருடைய நண்பர் யுகபாரதி அண்ணன். பாடலாசிரியர். இவங்க ரெண்டு பேரும் சேர்ந்து எனக்குப் புத்தகங்களை அறிமுகப் படுத்தினாங்க. அந்தப் புத்தகங்கள் எப்படிப்பட்ட புத்தகங்களா இருக்கும் என்றால்,

முழுக்க முழுக்க பொதுவுடைமை சித்தாந்தங்களைச் சொல்ற புத்தகங்களாதான் நான் படிக்க நேர்ந்தது. யுகபாரதி அண்ணனுடைய அப்பா மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தஞ்சாவூர் நகர செயலாளர். அவர் முழுக்க இடதுசாரிப் பின்னணியில் இருந்து வந்தவர். அதனால என்னோட ஆரம்பமே பொதுவுடைமை சித்தாந்தங்களைப் படிக்கிறதாக இருந்தது.

டிப்ளமோ முடிச்சிட்டு நாலஞ்சு வருஷம் வெவ்வேறு வேலைகள் பார்த்துட்டு இருந்தேன். கல்கியில ஒரு ஆறுமாசம் பிரீ லேன்சரா ஒர்க் பண்ணினேன். அதுக்கப்புறம் விகடன்ல வேலைக்கு சேர்ந்து ஒரு ஏழு வருஷம், அது ஒரு முக்கியமான பீரியட் என் லைஃப்ல, அப்படிதான் எழுத்துத் துறைக்கு வந்தது. அதனுடைய நீட்சியா சினிமா ஆர்வம் என்கிறது எனக்கு இருந்தது. நான் சார்லி சாப்ளினோட தீவிரமான வெறியன். சினிமாமேல ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின ஒரு பெரிய பங்கு சார்லி சாப்ளினுக்கு இருக்கு.

■

நான் அடிப்படையில இடதுசாரி இயக்கப் பின்னணியில இருந்து வந்தவன். டைஃபில ஒர்க் பண்ணியிருக்கேன். மக்கள்கிட்ட சில அரசியல் சார்ந்த விஷயங்களை முன்னெடுத்துட்டுப் போகனுங்கறதுதான் என்னுடைய அடிப்படையான விஷயம். அதுக்குத்தான் எழுத்து, பத்திரிக்கை, இலக்கியம், சினிமா எல்லாமே. நான்.. அதுக்குள்ள வந்தது.. சமூகம் சார்ந்து அரசியல் சார்ந்து சில விஷயங்களை மக்கள்கிட்ட கொண்டுபோய் சொல்லனுங்கறது. அதனால அதுக்கான மீடியமாத்தான் நான் இது எல்லாத்தையுமே கொண்டு வர்றேன். அப்படி ஒரு விஷயமாத்தான் சினிமாவையும் நான் எடுத்துக்கிட்டேன். அப்படிதான் இதுக்குள்ள வந்தது.

■

இடதுசாரி இயக்கப் பின்னணி என்பது ஒரு அரசியல் கட்சி கிடையாது அது ஒரு சித்தாந்தம், அது ஒரு கட்டமைப்பு. அதுக்குள்ள நீங்க போயிட்டீங்கன்னாலே.. மத்த இயக்கம் மாதிரி அது கிடையாது.. நீங்க அடிப்படையில மக்களைப் போயி சந்திக்கனும். அதுதான் முதல் படி. மக்களைப்படி அப்படிங்கறதுதான் மாவோ சொன்ன விஷயம். அடிப்படையில மக்கள்கிட்டே போகணும். களப்பணின்னு சொல்லி அந்த இயக்கத்துல ஒரு விஷயம் இருக்குது. அடிப்படை உறுப்பினர் பதவியில ஆரம்பிச்சு எல்லாத்துக்குமே மக்கள்கிட்டப் போயி சந்திச்சி மக்கள்கிட்ட களப்பணியாற்றி, அவங்களோட அனுபவங்களை சேகரிச்சி, அவங்களோட இருந்து, அவங்க வாழ்க்கையை தெரிஞ்சிகிட்ட பிறகுதான் நீங்க அந்த இயக்கத்துக்குள்ள வரமுடியும்.

■

ஒட்டுமொத்தமாக இளைஞர்கள் மார்க்சியத்தை விரும்பலைன்னு சொல்றதுல எனக்கு உடன்பாடில்லை. இன்னைக்கி இருக்கிற இளைஞர்கள்ல போராட்டக் களத்துக்கு வர்றதுக்கு, இணையத்துல அரசியல விவாதிக்கறதுக்கு ஒரு கூட்டம் தயாராகவே இருக்கு. தொடர்ந்து அதைப் பண்ணிக்கிட்டுதான் இருக்கிறாங்க. போராட்டங்கள்ல குறிப்பா ஈழப் போராட்டமா இருக்கட்டும், கல்வி குறித்த போராட்டங்களா இருக்கட்டும், மது ஒழிப்புக்கான போராட்டங்களா இருக்கட்டும், ஐ.டி. பீப்பிள்ல ஆரம்பிச்சு ஒரு பர்சன்டேஜ் இளைஞர்கள் அங்க நிக்கிறாங்க. கண்ஹையா குமாரோட எழுச்சியா

இருக்கட்டும் .. இந்தியா முழுக்க இன்றைக்கு இளைஞர்களுக்கு அரசியல் பற்றின புரிதலும், அரசியலுக்காக நிற்கிறதுங்கறதும் ஒரு கூட்டத்துக்கு அதிகமா இருக்கு. அதை ஆர்கனைஸ் பன்றதுக்கான சிஸ்டம்தான் இங்க இல்ல. அதனாலதான் இளைஞர்களை மார்க்சியம் ஈர்க்குதாங்கற கேள்வியையே நாம கேட்கிறோம்.

■

நீங்க பேர்கள விடுங்க. கம்யூனிசம் அது இது எல்லாத்தையுமே விடுங்க. இன்றைக்கு இந்தியாவோட மிக முக்கியமான தேவைங்கிறது மாற்று அரசியல். தமிழ்நாட்டுல திராவிட அரசியலா இருக்கட்டும்.. திராவிட அரசியல்னா நான் கருத்து ரீதியா சொல்லல.. தலைவர்கள முன்வச்சு சொல்றேன்.. இந்திய அளவில தேசிய நீரோட்டத்தில இரண்டு அரசியல்கட்சிகளோட அரசியலாகட்டும் இதிலிருந்து வேறு ஒரு அரசியல நாம முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் இன்றைக்கு இருக்கு.

இன்னிக்கு இந்திய சமூகம் எப்படிப்பட்ட ஒரு முரண்பாட சந்திச்சிட்டு வருதுன்னா.. மிக முக்கியம்னு நான் நினைக்கிறது நம்முடைய இயற்கை வளங்கள் மிகத் தீவிரமா சுரண்டப்பட்டுக்கிட்டிருக்கு. அப்போ வெள்ளம் போன்ற பல்வேறு பிரச்சினைகளை நாம சந்திச்சிட்டு இருக்கிறோம். இதுக்கு அடிப்படைக் காரணமே அரசியல்தான். இங்க இயற்கை வளங்களைச் சுரண்டி பெரு முதலாளிகள் ஆனவங்கதான் சேனல்கள் நடத்துறாங்க. அவங்கதான் இயற்கை வளங்களைப் பாதுகாக்கிறது குறித்து நமக்கு சொல்றாங்க. கல்வியின் மூலம் கல்வியை வைத்து சுரண்டிப் பணம் சம்பாதிக்கிறவங்கதான் கல்வித் தந்தைன்னு இங்க இருக்காங்க. அவங்ககிட்டதான் நாம கல்வி குறித்து உரையாட வேண்டியிருக்கு. இப்படியான ஒரு தீவிரமான முரண்பாட்டுக்குள்ள இருக்கிற இந்திய சமூகத்தை அதிலிருந்து வெளியில எடுத்துட்டு வர்றதுக்கு தயாராக இருக்கும் இளைஞர்களையும், மேலும் நிறைய இளைஞர்களையும் தயார்படுத்தி அழைத்துவரக்கூடிய ஒரு ஆர்கனைஸ்டு அமைப்புதான் நமக்குத் தேவை. அது வரும்போது நிச்சயமா இதெல்லாம் நடக்கும்.

■

இன்னும் பத்து வருடங்கள்ல அதுக்கான விஷயங்கள் நிச்சயமா நடக்கும்னு நான் நம்புகிறேன். ஒரு தீவிரமான அரசியல் எழுச்சி இந்தியாவில இன்னும் பத்து வருடங்கள்ல ஏற்படும்னு நான் நம்புறேன். அதற்கு இந்த இளைஞர்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமா இருக்கும்னு நான் நம்புறேன். இந்த இளைஞர்களோட பங்களிப்பு மிகத் தீவிரமா இருக்கும்னு நான் நம்புறேன்.

■

ஐம்பது ஆண்டுகாலமா நம்ம மக்களோட மனநிலையை கொஞ்சம் யோசிச்சிப் பார்த்தீங்கன்னா ஒரு கவர்ச்சிகரமான அரசியல் பின்னணியிலதான் நாம வந்துகிட்டே இருக்கிறோம். திராவிட இயக்கம் கொடுத்த எழுச்சி என்கிறது ரொம்ப முக்கியமான விஷயம் தமிழ்நாட்டுல. அது பெரியாரால நிகழ்ந்தது. அதன்பிறகு அதை மொத்தமா திராவிட இயக்கத் தலைவர்கள் வேற பாதைக்கு அழைச்சிட்டுப் போயிட்டாங்க. தமிழ்நாட்டு மக்களை ஒரு மந்தை மனோபாவத்துக்கு ஆளாக்கிட்டாங்க. இன்னிக்கி அதுதான் இவங்கள ரன் பண்ணிக்கிட்டிருக்கு.

■

மார்க்சிய சிந்தனைங்கறது.. நான் இன்னொரு விஷயத்தை முக்கியமா சொல்லிக்க விரும்பறேன். கம்யூனிஸ்ட் இயக்கம் மேலேயோ கம்யூனிஸ்ட் கட்சிகள் பற்றியோ எனக்கே விமர்சனம் இருக்குது. இது ஒன்னும் ஒரு மத அமைப்பு கிடையாது. எனக்கே அதன்மேலே விமர்சனங்கள் இருக்குது. இன்னும் இதை வளர்த்தெடுத்துட்டுப் போறதுக்கு உள்ளே இருக்கிறவங்களுக்கே நிறையப் பார்வைகள் இருக்கு. அது ஒரு பக்கம் இருக்க இளைஞர்களிடம் அதிகமாகக் கொண்டுபோய் சேர்ப்பதற்கான ஊடகங்களும் முயற்சிகளும் இப்ப வந்துக்கிட்டிருக்கு. அது நிறைய நடக்கும்னு நான் எதிர்பார்க்கிறேன்.

இதுவரைக்கும் இளைஞர்களை வளர்த்தெடுத்த விதம் அந்தமாதிரி இருக்கு. அதனால மார்க்சியத்தைவிட்டு அவர்கள் விலகி இருக்கிறார்கள். அதுதான் ரொம்ப முக்கியமான காரணமா நான் பார்க்கிறேன். குளோபலைசேஷன்னு ஒரு கதவைத் திறந்து விடுறீங்க. உங்களுக்கு சைனா போன் கிடைக்குது. உங்களுக்கு எல்லாமே கிடைக்குது. அதனுடைய தாக்கம் அதிகமா இருக்கும்போது இதனுடைய கவர்ச்சிதான் உங்களை அதிகமா ஈர்க்குமே ஒழிய அதைத் தாண்டி நீங்க சொல்ற விஷயங்கள் அவங்களைச் சீக்கிரமா அடையமுடியாது. அதனால இதையும் அதையும் சேர்க்கக்கூடிய ஒரு நவீன கட்டமைப்பு இதற்குள் வரணும். அதற்கான முயற்சிகள் எல்லாமே நடந்துட்டு இருக்கு.

■

முக்கியமா அரசியல் அப்படீன்னா தேர்தல் அரசியல் அப்படீங்கறதுதான் நம்ம பார்வையாயிருக்கு. அது ரொம்ப மொக்கையான கேவலமான ஒரு தளத்துல நம்ம சமூகத்தை இயங்க வச்சிக்கிட்டிருக்கு. தேர்தல் அரசியல் என்கிற பார்வைதான் நம்மள பலபேர் அரசியலுக்கு கூப்பிடறது, அரசியலுக்கு வரலையான்னு கேட்கிறது இப்படி பல்வேறு அபத்தங்கள் நடந்துகிட்டிருக்கிறது. கடந்த ஐம்பதாண்டு காலமா தமிழ்நாட்டோட சூழல் இப்படி இருக்கிறதுக்குக் காரணம் தேர்தல் அரசியல் அப்படிங்கற பார்வைதான். அரசியல்னா தேர்தல்ல போட்டியிடனும், அவங்களுக்கு என்ன ஓட்டு கிடைச்சிருக்கு, அவங்களுக்கு என்ன பதவி கிடைச்சிருக்கு அப்படீங்கறதுதான் இங்க அரசியல். அதனாலதான் மிகமிக அபத்தமானவர்களையெல்லாம் இங்க நாம் தொடர்ந்து தலைமையிலேயும், பதவிலேயும் வச்சிக்கிட்டே இருக்கிறோம். அத்தனை அபத்தங்களையும் நாம என்டெர்டெயின்மென்ட்டா எடுத்துக்கிட்டுப் போயிட்டே இருக்கிறோம். அரசியல் என்கிறது அது அல்ல. அரசியல் என்பது ஒரு சமூகத்தின் அற எழுச்சி. அதுதான் அரசியல். பெரியார் அதைத்தான் சொல்றார். அதனாலதான் பெரியார் கடைசிவரைக்கும் தேர்தல் அரசியலுக்கே வரலை.

ஒரு மனிதனுடைய மன அற எழுச்சிதான் அரசியல். அதை யார் உருவாக்குறாங்களோ அவங்கதான் அரசியல்வாதிகள். யார் அதற்காகப் பாடுபடறாங்களோ அவங்க எல்லாமே அரசியல்வாதிகள்தான். அந்த விஷயத்தைத்தான் நான் பேச விரும்புறேன். கம்யூனிசம் என்கிறது இந்த அற எழுச்சிக்காகப் போராடக்கூடிய ஒரு சித்தாந்தம்தான். நான் பௌத்தம் மாதிரிதான் கம்யூனிசத்தையும் பார்க்கிறேன். விஷயம் வேற வேறேயா இருக்கலாம். இது பொருளியலா இருக்கலாம். அது அகவியலா இருக்கலாம். அறம் சார்ந்து பேசக்கூடிய அத்தனையுமே கம்யூனிசத்துக்குள்ள வரும்னுதான் நான் நினைக்கிறேன். சக மனிதனை

நேசிப்பது, சாதியத்துக்கு எதிராகப் போராடுவது, மதவாதத்துக்கு எதிராகப் போராடுவது, உள்ளூர் தொழில்களுக்காகப் போராடுவது, உள்ளூர் அறிவியலுக்காகப் போராடுவது, இயற்கையைப் பாதுகாப்பது இதெல்லாம்தான் இன்றைக்குத் தேவை. இதற்காகப் போராடுகிற எல்லாருமே அரசியல்வாதிகள்தான். இதைப் பேசவேண்டும் என்பதற்காகத்தான் இதுபோன்ற ஜோக்கர் என்ற ஒரு விஷயத்தை எடுத்தேன்.

■

இது கான்டெம்பொரரி இந்தியாவைப்பற்றிப் பேசுற ஒரு எமோசனல் படம். இது நம்முடைய அன்றாட வாழ்க்கையைப் பத்தி, வறுமையைப் பத்தி, நம்முடைய உணர்வுகளைப் பத்திப் பேசுற ஒரு படம். நம்முடைய ஒட்டுமொத்த அரசியல் அமைப்பைப்பத்திப் பேசுற ஒரு பிலிம்.

இந்தப் படம் அதிகாரத்தை எதிர்க்கிற படம். சிஸ்டத்தைக் கேள்வி கேட்கிற படம். இன்றைக்கு இருக்கிற சமகால அரசியலை நோக்கி கேள்வி எழுப்புகிற படம். எல்லாமே இருக்கு இந்தப் படத்துல. ஆனா அது எந்த அளவுல என்பதை நீங்க பார்த்துட்டுத்தான் முடிவு பண்ண முடியும்.

■

இடது சாரி இயக்க கலைஞர்கள் இருக்கிறார்களே, அவர்கள் எந்த இயக்கமாக வேண்டுமானாலும் இருக்கட்டும், அவர்களுடைய பாடல்களில் ஒரு நக்கல் இருக்கும். அவர்களுக்கு சமுதாயத்தின் மீதும், அதிகாரத்தின் மீதும் கலையை வெளிப்படுத்தும் விதமே ஒரு சட்டையரிக்கலாக இருக்கும். அந்த இன்ஸ்பிரேஷன் எனக்கு அப்போதிருந்தே இருந்தது. சார்லி சாப்ளின்கிட்டே அது அதிகமா இருக்கும். அதாவது சட்டையரிக்கலா விஷயத்தை வெளிப்படுத்தறதுங்கறது. அப்படியான ஒரு பொலிட்டிக்கலான ஒரு விஷயம்தான் இந்த ஜோக்கர் அப்படிங்கறது.

இந்திய ஜனநாயகத்தை நான் ரொம்ப மதிக்கிறேன். இந்த இந்திய தேச கட்டுமானத்தை நான் ரொம்பவும் மதிக்கிறேன். ரொம்பவும் லவ் பண்ணறேன். அது குறித்துதான் நான் ரொம்பவும் பேசிக்கிட்டே இருப்பேன்.

■

எப்பவுமே மக்கள்கிட்டே இருந்து விலகி ஒரு ஆர்ட் பண்ணனும்கற விருப்பம் எனக்கு இல்லை. ஏன்னா கலை மக்களுக்கானது. இன்னொன்னு இடதுசாரி இயக்க கலைஞன்னுகூட என்னை நான் அடையாளப்படுத்திக்க விரும்பல. அதுதான் எனக்கு எல்லாமே கொடுத்தது. ஆனால் ஒரு கலைஞனை அப்படிக்கூட அடையாளப்படுத்த வேண்டாம்னுதான் நான் நினைக்கிறேன். இடதுசாரி சிந்தனை அப்படீங்கறது என்னைப் பொருத்தவரை ஒரு வாழ்க்கைமுறை. ஒரு கட்சி சார்ந்ததெல்லாம் இல்லை. அத நான் நேசிக்கிறேன். கலைஞன் என்கிறவன் எந்த அடையாளமும் இல்லாமல் தன் வேலையைச் செய்யணும்கறதுதான் விஷயம். கலை மக்களுக்கானது என்கிற விஷயத்தில் மக்களிடம் இருந்து எடுத்துதான் நாம அவங்களுக்குக் கொடுக்கிறோம் அப்படிங்கறபோது அதைவிட சுவாரஸ்யமான விஷயம் எங்கயும் இல்லேன்னு நான் நினைக்கிறேன்.

■

ஒருவிஷயம் .. விளிம்புநிலை மனிதர்கள் என்ற வார்த்தையையே முதல்ல தூக்குங்க. அதென்ன விளிம்புநிலை மனிதர்கள்?

அப்படியெல்லாம் ஒன்னுமே கிடையாது. மனிதர்கள்.. அவ்வளவுதான். விளிம்புநிலை மனிதர்களைப் பற்றிப் பேசுறோம்னு பெருமை பேசினாலே அது ரொம்பத் தப்பு. அப்படிப் பேசுற எடத்துல எல்லாம் யாருமே கிடையாது. இந்த ஒரு மனோபாவம்தான்.. நீங்க அப்படிப் பெயர் எல்லாம் சூட்டாதீங்க. ஹரிஜன்னு பெயர் சூட்டறதுக்குப் பின்னால உள்ள அரசியலையே நான் வெறுக்கிறேன். அதனால அப்படி ஒரு விஷயமே கிடையாது. நீங்க மனிதர்களுக்கான அரசியலைப் பேசுங்க. நீங்க ஏன் விளிம்பு நிலை மனிதர்கள் அரசியல், மேல்தட்டு மனிதர்கள் அரசியல்னு பிரிச்சுப் பேசுறீங்க. எல்லாருக்கும் அரசியல் இருக்கு. அதைத் துணிவா பேசுங்க அப்படீங்கறதுதான் என்னோட கருத்து. அதனால இப்படி வந்து இந்த ரெண்டு விஷயத்தைப் பிரிச்சுப் பேசுறதிலேயே எனக்கு உடன்பாடில்லை. ஒரு படைப்பாளிங்கறவன் எல்லாருக்குமான அரசியலைப் பேசனும். நாம அதிகமா இவங்களப் பத்திப் பேசுறதுக்குக் காரணம், நீங்க என்ன இடத்துக்குப் போனாலும் தொடர்ந்து பொருளாதார ரீதியாகவும் சாதிய ரீதியாகவும் ஒடுக்கப்படுகிறவர்களைத்தான் நீங்க பேசனும். அது ஒரு படைப்பாளியோட கடமை. அதனால தொடர்ந்து நாம இதைப்பத்திப் பேசிக்கிட்டு இருக்கிறோம்.

■

இந்தப்படம் முழுக்கவே ஆர்ட்டிஸ்டுகளோட பங்கு ரொம்ப முக்கியமானது. நீங்க படம் பார்த்தபிறகு அது உங்களுக்குத் தெரியவரும்னு நினைக்கிறேன்.

குரு சோமசுந்தரம் ஒரு நல்ல பெர்பார்மர். மு.ராமசாமி, அவர் தமிழ்நாட்டின் மிக முக்கியமான நாடக ஆளுமை. ஆனா அவருக்கு தொடர்ந்து சினிமாவுல அவருக்கான இடம் என்பது கரெக்டா கிடைக்கல. இந்தப் படத்துல அவரு ரொம்ப முக்கியமான ஒரு விஷயம் பண்ணிருக்காரு. அப்புறம், எழுத்தாளர் பவா செல்லத்துரை. எழுத்தாளரா அவரத் தெரியும் நமக்கு. இந்தப் படத்துல நடிகரா ரொம்ப முக்கியமான பங்காற்றியிருக்காரு.

■

இந்தப் படத்துல இந்த அரசியலைத் தாண்டி பெண்களுக்கான ஒரு விஷயம் இருக்குது. இன்றைக்கிருக்கிற எளிமையான இந்தியப் பெண்களின் மனநிலை விருப்பம் இருக்குது இல்லையா அது சார்ந்த சில பதிவுகள் இருக்கு.

பொதுவா நான் பெண் கதா பாத்திரங்கள் எழுதும்போது கொஞ்சம் கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கணும்னு நினைப்பேன். இசை என்கிற கேரக்டர் அதுதான் ஒரு பெண் எப்படி வீதியில் நின்று போராட முடியும் என்கிறதுக்கு அடையாளமா அந்த கேரக்டர் இருக்கும்.

சோஸியல் மீடியாங்கறது இன்றைக்கு எப்படி இருக்கு அவங்க எப்படி ஒரு விஷயத்தைப் போர்ட்ரெய்ட் பண்ணறாங்க ஒரு சின்ன விஷயத்தைக்கூட அவங்க எப்படி வெளியில எடுத்துட்டு வர முடியும் அப்படீங்கறது பற்றி ஒரு சின்ன ரெபரன்ஸ் இருக்கு.

■

ஒட்டுமொத்தமா என்னுடைய விஷன் என்னன்னா, வியாபாரம் சினிமாவுக்கு ரொம்ப முக்கியம், ஆனா ஒரு கலைஞனுக்கு அந்தக் கவலை இருக்கக்கூடாது. அந்தக் கவலை வந்திருச்சுன்னா நாம அதுக்காக சில காரியங்கள் செய்யப்போயி அது நமக்கு என்ன பெற்றுத்தரும்னு உறுதியாச்

சொல்ல முடியாது. அதைவிட நாம நேர்மையா காரியங்கள் செஞ்சா அது நமக்கு நல்ல பலனைத் தரும்னு நான் உறுதியா நம்புறேன்.

■

கருத்து சுதந்திரத்திற்கான, எல்லாரும் அரசியல் பேசலாம்கறதுக்கான ஒரு சின்ன டோரை இந்தப் படத்துல சென்ஸாரும் அனுமதிச்சது என்கிறது ஒரு அடுத்த கட்டம்தானே.

■

ஒரு படைப்பு என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்னு கலைஞனால நிச்சயமா சொல்லமுடியாது. விருப்பம் அப்படீங்கறது என்னன்னா சில கேள்விகளை முன்வைக்கனும். எல்லா படைப்புகளுமே சில கேள்விகளை முன்வச்சாலே போதும்கறதுதான் என்னோட அபிப்பிராயம். என்ன கேள்விகளை முன்வைக்கனும்னா, ஒன்னு சக மனிதர்களுக்காகப் போராடுவது. அதாவது போராட்டங்கள்ல நாம விலகி நிற்காமல்... விலகி நிற்கிறதையும் காட்டிலும் பெரிய கொடுமை என்னன்னா.. வேடிக்கை பார்த்துட்டு நமக்காகப் போராடுறவங்களையே நாம பார்த்து சிரிச்சிட்டுப் போறது இருக்கிறதில்லையா இந்த ஒரு போக்கு ரொம்ப அதிகமா இருக்கு. இதுல இருந்து விலகி உண்மையான போராட்டங்கள்ல நாமளும் பங்கெடுத்துக்கிடனும்னு ஒரு எண்ணத்தை இந்தப் படம் ரெய்ஸ் பண்ணுச்சுன்னா அதுவே பெரிய வெற்றியா நான் நினைக்கிறேன்.

■

நன்றி: பில்மி ஒர்க் மற்றும் ரெட்பிக்ஸ் *24×7*

‘இந்தியச் சமுகத்தில் சாதியும்–வர்க்கமும்’ என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் அக்டோபர் 15 அன்று சென்னையில் நடைபெறும்.

அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் மாநிலக் குழு முடிவு.

■

விபரங்களுக்கு
டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத்
பொதுச் செயலாளர்
அனைத்திந்திய முற்போக்குப் பேரவை
9940664343

## உதவும் கரங்கள்

1. தோழர். ஆர்.பாலச்சந்திரன், திருத்தங்கல் ரூ.100/-
2. தோழர். முனியப்பன், சிவகாசி ரூ.100/-
3. திரு. இரா. கதைப்பித்தன், இராஜபாளையம் ரூ.200/-
4. கந்தகப்பூக்கள் ஸ்ரீபதி, சிவகாசி ரூ.100/-
5. மருத்துவர் இராமமூர்த்தி, வ.புதுப்பட்டி ரூ.50/-



# மரண முத்தம்...!

(சாதி ஆணவக்
கொலைக்குக் கணவனைப்
பறிகொடுத்துக்
காயப்பட்டவள்
தன் கொலைவெறித்
தந்தைக்கு எழுதியது
போல)

**கவிஞர் பூவரசி
மறைமலையன்**

அன்புள்ள அப்பாவுக்கு வணக்கம் சொன்னேன்
அம்மாவும் உங்களுக்குள் என்ப தாலே.
என்புதோல் போர்த்திட்ட உடம்பு பொய்யா?
எழிலுடம்பை இயக்குகின்ற உயிர்தான் பொய்யா?
கண்போல எனைக்காத்த பாசம் பொய்யா?
கணத்துக்குக் கணமெந்தன் வளர்ச்சி கண்டு
செண்டுமலர் போல்சிரித்த மகிழ்வு பொய்யா?
செல்லரித்த சாதிவெறி மட்டும் மெய்யா?

காருக்குள் அமர்ந்துகொண்டு வெட்டுப் பட்ட
கவின்மகளென் துடிப்புமக்குக் கற்கண் டாகி
வேருக்குள் வெந்நீரை ஊற்றல் போல
வெறிபிடித்த ஓநாயாய்ச் செந்நீர் உண்டீர்!
ஊருக்குள் என்னைப்போல் யாரே என்று
உறுமியுங்கள் மீசையைத்தான் முறுக்க எண்ணி
நாறுகின்ற மலக்குடலாய்க் கம்பிக் குள்ளே
நற்சாதிச் சான்றுபெற நயக்கின் றீரோ?

அம்மாவின் மூளையினைச் சலவை செய்தீர்
அருந்ததிகண் டுமையணைத்த பாவத் தாலே
கைம்மாவாய் உருட்டியவள் கண்ணீர் காத்தீர்
கருத்தரித்த காலமுதல் படிப்படி யாக
செம்மாந்து வளர்த்தெடுத்த அன்பு பாசம்
செத்தொழிய உத்தமராய் வடிவங் கொண்டீர்
பொய்மான்பின் போனவரே போட்ட வேடம்
புரிந்திருந்தால் எனக்கிடுவீர் மரண முத்தம்!



# குறள்மொழி

**அழுக்காறு அவா வெகுளி
இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.**
(குறள் 35)

அறம் சார்ந்து நடப்பது என்பது
பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல்
இவைகளை நீக்கி நடப்பது ஆகும்.

# கவிஞர் கோ.கலியமூர்த்தி கவிதைகள்



## எனக்குள்ளும் இருக்கிறது கனவு

கனவின் திரைக்குப்பின்
கடந்துவந்த பயணங்களின்
முட்புதர்கள் அடர்ந்த பாதையிருக்கிறது
கண்ணீரில் ஊறி நமத்துப்போன
இரவுகள் கிடக்கின்ற பால்யமிருக்கிறது
மலரும் முன்பே உதிர்ந்துவிட்ட கனவுகளின்
சருகுகள் நொறுங்கும் இளமையிருக்கிறது
காலத்தால் ஒருவாறு காயங்கள் ஆறினாலும்
ஆறாத வடுவான அவமானங்கள் இருக்கின்றன
நம்பிக்கைகளைக் கொத்திப் பறக்கும்
கூரலகுப் பருந்துகளின் நடுவே
தனித்துவிடப்பட்ட கோழிக்குஞ்சாய்த்
தவித்த பொழுதுகள் நினைவிருக்கின்றன
சாதீயத்தின் அவமானங்களை
சாராயத்தில் கரைத்த ஒரு தகப்பன்
தள்ளாடி வீடுதிரும்பும் மாலைகள் இருக்கின்றன
பள்ளிக்கட்டணம் கட்டக் கதவை விற்றுவிட்டு
சாக்குப்படுதாவை நிலைப்படியில் கட்டி
கூதல்காற்றில் நடுங்கிக்கிடந்த
தாயின், சகோதரியின் இரவுகள் இருக்கின்றன
காமராசரின் மதிய உணவிலும்
ஹாஸ்டல் தினங்களின் புழுத்த கஞ்சியிலும்
பசியாறிக் கிடந்த ஒரு வாழ்க்கையிருக்கிறது
இப்படி வாழ்ந்த என்போன்ற பலர்போல
மறந்துவிடமுடியாத மனமிருக்கிறது

அதனால்தான்..அதனால்தானோ

கலாம்கள் காட்டும் கனவுக்குப் பதிலாக
காரல்மார்க்ஸ் ஊட்டிய கனவேயிருக்கிறது.
■



ஆமாங்கடா! அரசியல் கவிதைதான்!
அப்புடித்தான் எழுதுவோம்!
நுட்பமில்லை, ஆழமில்லை, கவித்துவமில்லை,
சொற்சிக்கனம் இல்லை! வெங்காயம் இல்லை!
எத்தனை இல்லைகள் நீ சொன்னாலும்
பரவாயில்லை!
உண்டுகளில் உண்டு வளர்ந்தவனில்லை நான்
இல்லைகளில் கிடந்து உழன்றவன்
காப்பிக்கு அலைந்த வறுமையல்ல எனது.
கஞ்சிக்கு அலைந்து காய்ந்தது.
ராச்சோறு எடுக்கத் தூக்கிச்சுமந்த
பிச்சைப்பாத்திரம்
கனக்கிறது இன்னும்
கவிதையில்லையென்றால் போகட்டும்.
உனக்காகவில்லை நான் எழுதியது
பவழமல்லி மணம் கமழும் கொல்லையை
துளசிமாடம் ஒளிமலர்த்தும் புனிதத்தை
நீயெழுதி நிரூபி நவீனத்துவத்தை.
சாணியள்ளிய என் தாய்க்கு
நீ கொடுத்த பழஞ்சோற்றை உண்டிருந்தாலும்
உழைப்புக்கு நீர் கொடுத்த ஏமாற்றுக்கூலி அது
நாய்போல அலையேன் நான் நக்கி வாலாட்டி
கண்ணீரின் மைகொண்டு வலியெழுதும்போது
அழகியல் அல்ல அரசியல்தான் கொதிக்குமதில்
போடாபோ! பொணந்திண்ணி!
கழுகுகளின் அலகழகை நீபாடு!
கதறுகிற கோழிக்குஞ்சின் உயிர்துடிக்கும் ஓலத்தை
சீறிச் சினந்தெழுந்து சிங்கம்போல் பாயும்
தாய்க்கோழி கோபத்தைத்
தான் பேசும் என் கவிதை!
அவமானச் சேற்றில் பசியோடு உழன்றிருந்த
என்போன்ற தோழன் இதைப் படித்திடுவான்
தீப்பற்றி எங்கள் சொற்கள் எரிகையிலே
சாம்பலாய் உதிருமுங்கள் சாகச அழகியல்கள்.
■

# கவிஞர் கோ.கலியமூர்த்தி கவிதைகள்



# ஜோதிட பலன்

இரா.கதைப்பித்தன்

மேற்கு மாம்பலம் போஸ்டல் காலனி நான்காவது தெருவில் நடுவில் அமைந்துள்ள அந்தப் பழைய காலத்து வீட்டின் காம்பவுண்டு கேட்டை காலை வேளையில் திறந்து கொண்டு, கட்டம் போட்ட சட்டையும் கைலியும் அணிந்த கிருதா, மீசைகள் உள்ள இரண்டு பேர், உள்ளே நுழைந்து எதிரே பார்த்தனர். அப்போதுதான் வீட்டின் கூடத்திலிருந்து குடிப்பதற்கு கும்பகோணம் டிகிரி காப்பியை ஒரு வட்டை டம்பளரிலும், படிப்பதற்கு தினமணி பேப்பரை ஒரு கையிலும் எடுத்துக் கொண்டு பிரபல ஜோதிடர் சிரிகேச நல்லூர் சிவராமன் வாசல் திண்ணையை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

“சாமீ! வணக்கமுங்க!” என்ற கட்டைக்குரலைக் கேட்டு திடுக்கிட்டு எதிரே பார்த்தவர், திண்ணையில் உட்காராமல் திகைத்தபடி நின்றார். “யார் நீங்க, யாரைப் பார்க்கணும்?”.

“உங்களைத்தான் சாமீ பார்க்க வந்தோம். நீங்க தானே தினசரி டி.வி.யிலே ராசிபலன் சொல்ற சிரிகேசநல்லூர் சிவராமன்? வாசலில் போர்டை பார்த்துட்டுதான் சாமீ உள்ளே வர்றோம்!”

இந்த பதிலை சுத்தமாக அவர் எதிர்பார்க்கவில்லை. இவர்கள் எதற்காக தன்னைப் பார்க்க வரணும்? ஆட்கள் தோற்றமே சரியாக இல்லையே?

“சரி, உள்ளே வாங்க”

திண்ணையில் இருந்த நாற்காலியில் அவர் அமர்ந்தபடி, திண்ணையின் ஓரத்தைக் காட்டி ‘உட்காருங்க’ என்று ஒரு நாகரிகத்திற்குச் சொல்லிவிட்டு, ‘என்ன விஷயம்?’ என்றார்.

“இருக்கட்டும், சாமி! நாங்க நின்னுக்கிட்டே சொல்றோம்! உங்களாலே நேத்து எங்க ரெண்டு பேருக்கும் ஆயிரக் கணக்கிலே தொழில்லே நஷ்டம் ஆயிடுச்சு சாமி! அதைச் சொல்லத்தான் வந்தோம்”.

இந்த பதிலைக் கேட்டு மேலும் திடுக்கிட்டுப் போன அவர், “என்னப்பா சொல்றீங்க? என்னாலே உங்களுக்கு நஷ்டமா? நான் இப்பதானே உங்களையே பார்க்கிறேன். நீங்க யாருன்னே எனக்குத் தெரியாதே”, என்று குழம்பியபடி கேட்டார்.

"நீங்க எங்களைப் பாக்காட்ட என்ன சாமீ? நாங்கதான் தினசரி உங்களை டி.வி.யிலே பார்க்கிறோமே! காலைலே 7மணிக்கு எல்லாம் டி.வி.யிலே வந்து மிதுன ராசி நேயர்களே, கடக ராசி நேயர்களேன்னு கூப்பிட்டுக் கூப்பிட்டு அருமையா ராசிபலனை அழுத்தம் திருத்தமா சொல்றீங்களே! அதைக் கேட்டு நடந்ததிலேதான் எங்களுக்கு நேத்து நஷ்டமாயிப் போச்சு சாமீ! அதைச் சொல்லி உங்ககிட்ட நஷ்ட ஈடா செலவுக்கு வாங்கிட்டுப் போலாம்னு வந்தோம் சாமி!".

சிரிகேசநல்லூர் சிவராமனுக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. இவர்கள் என்ன சொல்கிறார்கள் எனவும் புரியவில்லை. நஷ்ட ஈடு, செலவு என்று வேறு சொல்கிறார்கள். அட.. கடவுளே! ஈஸ்வரா, இன்றைக்கு நான் விழித்த நேரம் எனக்கே சரி இல்லையோ? யார் முகத்தில் விழித்தேன்?

"என்னப்பா சொல்றீங்க, ஒன்னுமே புரியலையே? விளக்கமாச் சொல்லுங்கப்பா!", என்று கெஞ்சும் தொனியில் கேட்டார்.

"அதாவது சாமி, விளக்கமாவே சொல்றேன்", இருவரில் ஒருவன் பேச ஆரம்பித்தான். தினசரி உங்க ராசிபலன் நிகழ்ச்சியைக் கேட்ட பிறகுதான் தொழில் செய்யப் போறது பற்றி முடிவு எடுப்போம். போன வாரம் மூனு நாலு நாளு தொடர்ந்து கேட்டோம். எனக்கு மிதுன ராசி. இவனுக்கு தனுசு ராசி. இரண்டு பேருக்கும் கிரக நிலையெல்லாம் அருமையா இருக்கு. எந்தத் தொழில் செஞ்சாலும் கூடுதலான பலன்கள் கிடைக்கும், அற்புதமான பலன் எல்லாம் கிடைக்கும் என்று உசத்திப் பேசினீங்க. நாங்க அதை அப்படியே நம்பி முன்னேற்பாடு எல்லாம் பிரமாதமாகச் செஞ்சு வச்சு, நேத்து ராத்திரி போனோமா.. நல்ல வேளை தப்பிச்சு வந்தது பெரும்பாடாப் போச்சு! உங்க ராசிபலன்படி பலிச்சிருந்தா, ஆயிரக்கணக்கிலே ரெண்டு பேருக்கும் கிடைச்சிருக்கும். இப்ப எல்லாம் போயி டீ குடிக்கக்கூட வழியில்லே! நீங்க தான் செலவுக்கு ஆளுக்கு 100 ரூபாயாவது கொடுத்தனுப்பணும்!".

"என்னப்பா சொல்றே? என்னோட ராசிபலன் கேட்டவங்க எத்தனை பேர் ஃபோன்லே எனக்கு நன்றி சொல்றாங்க. நேர்லேயும் வந்து பார்த்துட்டுப் போறாங்க! நீ சொல்றது ஒன்னுமே புரியல்லையே! ராத்திரி எங்கே போனீங்க? நீங்க என்ன தொழில் பண்றீங்க?".

"ஓ.. அதைச் சொல்ல விட்டுட்டோமா! அதாவது சாமீ, வெளியூர்களுக்குப் போனவங்களோட வீடுகள் எல்லாம் பூட்டி இருக்குமில்லையா? அங்கே நோட்டம் பார்த்து, ஆள் நடமாட்டம் எல்லாம் பகல்லே போய் கவனிச்சு, பக்காவா திட்டம் போட்டு, ராத்திரியிலே நம்ம கைவரிசையை காட்டி, கிடைச்சதை எடுத்துட்டு வர்றதுதான் எங்க தொழில் சாமீ! இதுக்கு முந்தி இரண்டு, மூனு தடவை உங்க ராசி பலன்படி போய் கரெக்டா அடிச்சுட்டு வந்திருக்கோமே! நேத்துதான் அம்பத்தூர்லே ஒரு பார்ட்டி வர்றதுக்கு ஒரு வாரம் ஆகுமின்னாங்கன்னுட்டு போனா, திடீர்னு நேத்து நைட்டு கார்லே வந்து இறங்கிட்டாங்க. நாங்க வீட்டுப் பின்புறத்திலே வாட்ச்மேனை அடிச்சுத் தூக்கிப்போட்டுட்டு கதவைத் திறக்கப் போற சமயத்திலே காரியம் பூரா கெட்டுப் போச்சு! வீட்டுக்காரங்க எங்களப் பார்த்துட்டுப் போட்ட சத்தம் கேட்டு ஆள் வரவும், நாங்க தப்பிச்சு ஓடி வந்ததே பெரிய கதை!"

"அடப்பாவிகளா! திருட்டுப் பசங்களா நீங்க? ஆளைப்

பார்த்தவுடனேயே நான் சந்தேகப்பட்டேன். நீ செய்யற தொழிலே மோசம். இதுக்கு என்ன வேற துணைக்கு இழுக்கிறீங்களா? முதல்லே இடத்தைக் காலி பண்ணுங்க! சிவ சிவா! காலங்கார்த்தாலே உங்க கதையைக் கேட்கணுமா?" என்று தலையில் அடித்துக் கொண்டார்.

"சாமீ! இருங்க சாமி, எங்க ராசிபலன்படி எங்களுக்கு அமோகமா பலன் கிடைக்கும்னு நேத்து காலைலேகூட நீங்க டி.வி.லே சொன்னதை நம்பித்தான் போனோம் சாமி! எந்த தொழில் செஞ்சாலும் நல்ல பலன் கிடைக்கும்னு நீங்க சொன்னதை நம்பி, சாமி! 'செய்யும் தொழிலே தெய்வம்'னு பெரியவங்க சொல்லி இருக்காங்க. நாங்க எங்களுக்குப் பழக்கமான இந்தத் தொழிலைச் செய்யறோம். இதுல என்ன தப்பு சாமீ! சொல்லுங்க! நீங்க எங்களுக்குச் சொன்ன பலன் பலிக்காததாலே, நீங்கதான் ஏதாவது செலவுக்கு கொடுக்கணும். அதை வாங்கிட்டுப் போகத்தான் நாங்க வந்தோம்" என்று உறுதியா இருவரும் சொல்லவும், சிவராமனுக்கு ஒருபக்கம் சிரிப்பும், கோபமும் கலந்து வந்தது.

இவர்களிடம் என்ன சொல்லி சமாதானம் செய்வது?

"இந்தா பாருப்பா! டி.வி.யிலே நான் சொல்ற ராசிபலன் எல்லாம் பொதுவான பலன் அப்பா. கிரக நிலைகளை கவனித்து அன்னன்னிக்கு எல்லா ராசிக்கும் உள்ள பலன்களை நாங்க பொதுவாகச் சொல்லி அவங்களை ஊக்கப் படுத்தறதுக்காகவும், ஓரளவுக்குக் கவலைப்படாம இருக்கறதுக்கும் சேவை மாதிரி செய்யறேன். ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும் தினசரி நடக்கற பலனைக் கணிக்கறதுன்னா, அவங்க பிறந்த விபரம் கொண்ட ஜாதகத்தை வச்சுக்கான் கரெக்டா பலன்களைச் சொல்ல முடியும். அப்படி ஜாதகம் பார்த்துச் சொன்னா, கரெக்டா பலன்களைச் சொல்லலாம்! நீங்க டி.வி.யிலே பலன்களைக் கேட்டுட்டு இப்படி வந்து எங்கிட்ட பணம் கேட்டா.. அது எப்படிப்பா நியாயமாகும்? நீயே சொல்லு?", என்று அழாத குறையாகக் கெஞ்சினார்.

உடனே அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு இருவரில் ஒருவன் கையில் வைத்திருந்த மஞ்சள் பையைப் பிரித்து, "சாமி, நாங்க இங்க வர்றதுக்கு முந்தியே ஒத்தர்கிட்ட கேட்டதுக்கு, அவரும் இதே பதிலைத்தான் சொன்னாரு. அதனாலே நாங்க வரும்போதே எங்க ரெண்டு பேரோட ஜாதகங்களையும் தேடி எடுத்துக் கொண்டு வந்திருக்கோம் சாமி! இந்த வாரமும் பெரம்பூர் பக்கம் ஒரு பணக்கார வீட்டிலே வெளியூர் போய் இருக்காங்க. வர ஒரு மாசம் ஆகுமாம். இடத்தை எல்லாம் போய் பாத்திட்டு வந்துட்டோம். எங்க ஜாதகங்களை நல்லா பாத்து, கிரக நிலைகள் எப்ப சௌகரியமாமா இருக்கு, என்னைக்கு நாங்க எங்க தொழிலைச் செய்ய அங்கே போனா, அருமையான பலன், கூடுதலான பலன் எல்லாம் கிடைக்கும்னு கணிச்சு சொல்லிருங்க சாமி! உங்களுக்குப் புண்ணியமாப் போட்டும்! எங்க செலவுக்குக்கூட நீங்க பணம் கொடுக்க வேண்டாம்! இப்ப டீ குடிக்க மட்டும் ஒரு 50 ரூபாய் கொடுத்தீங்கன்னா, பக்கத்திலே போய் ஏதாவது லைட்டா சாப்பிட்டு.. டீ குடிச்சிட்டு வந்திர்றோம்! நீங்க அதுக்குள்ள இந்த ஜாதகங்களுக்கு பலனை எழுதி ஒரு பேப்பர்ல குறிச்சுக் கொடுத்திடுங்க! நாங்க போய்ட்டு ஒரு அரை மணிலே வந்திடறோம். டவுன் பஸ் ஸ்டாப்புக்கு எதுத்த டீக்கடைக்குத்தான் போறோம் சாமீ! அதுக்குள்ள கொஞ்சம் பாத்து வைங்க சாமீ!", என்றபடி பணிவாக குனிந்து இரண்டு ஜாதகங்களையும் அவர்

முன்னே வைத்துவிட்டு, இரண்டு பேரும் ஒரு கும்பிடு போட்டபடி வெளியே நடந்தனர்.

அவர்கள் பேசியதைக் கேட்ட சிரிகேசநல்லூர் சிவராமன் சில நிமிடங்கள் அப்படியே திக்பிரமை பிடித்தாற்போல வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

“தொழில் நல்லா நடக்கும்”னு ஜோதிடம் சொன்னதுக்கு இப்படி ஒரு தண்டனையா? என்று சிந்தித்தபடி, வேறு வழியின்றி அந்த ஜாதகங்களை மெல்லக் கையில் எடுத்தார். ■



# சிரிக்கிறது சுதந்திரம்

பாவலர்
கருமலைத்தமிழாழன்

நாட்டிற்கு நாம்கிடைத்தோம் சுதந்தி ரத்தால்
நமக்கின்று கிடைத்துளதா இந்த நாடு
ஏட்டினிலே மட்டும்நாம் சுதந்தி ரத்தை
எழுதுகின்ற நிலையில்தாம் உள்ளோ மின்றும்
காட்டுகின்றார் சுதந்திரத்தை ஆண்டில் ஓர்நாள்
பாட்டினிலே வீதியெல்லாம் ஓடும் என்ற
பால்தேனைப் பார்க்கவில்லை இன்னு மிங்கே!

ஆட்சிக்கு வருபவர்கள் எல்லாம் திட்டம்
அடுக்கடுக்காய் நன்றாகத் தீட்டு கின்றார்
கூட்டாக எதிர்கட்சி யோடு கைகள்
குலுக்கிபங்கை இருவருமே வாங்கு கின்றார்
வாட்டுகின்ற வறுமையினைப் போக்கு கின்ற
வழிகளினைக் கோப்புகளில் வடித்து வைத்துக்
காட்சியாகக் கல்வெட்டைத் திறந்து வைத்துக்
கண்முன்னே தொகைமுழுதும் சுருட்டு கின்றார்!

அரசாங்க அலுவலர்கள் ஆட்சி யர்க்கும்
அரசியலார் முதலாளி வர்க்கத் திற்கும்
அரசாங்கம் உலகவங்கி ஆணை கட்கும்
அடிபணிந்து நின்றிருக்க; தட்டிக் கேட்கும்
கரங்களுடை மக்கள்மத சாதி கட்கும்
கருத்தழிக்கும் மதுவிற்கும் திரைப்படத் திற்கும்
சிரம்தாழ்த்தி அடிமையராய் வீழ்ந்தி ருக்க
சிரிக்கிறது ஏளனமாய் சுதந்தி ரம்தான்!

# இதழ் குறித்த சிறு குறிப்பு

இது வணிக நோக்கமற்ற இலவச இதழ். நன்கொடையாளர்களுக்கு மட்டுமல்லாது நன்கொடை அளிக்காதவர்களுக்கும் விநியோகிக்கப்படுகிறது. நன்கொடையாளர்களுக்கு இயன்றவரை தொடர்ந்து இதழ் அனுப்ப முயற்சிக்கப்படுகிறது. ஒருவேளை இதழ் கிடைக்கப் பெறவில்லை எனில் அன்புடன் எமக்கு அலைபேசி வழி நினைவூட்டக் கேட்டுக் கொள்கிறோம்.

கணினியைப் பயன்படுத்த அறிந்தவர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியை எமக்கு அனுப்பினால் மின்னிதழாக இதழை அனுப்பிவைப்போம். அது குறைவாக இதழ்களை அச்சிடவும், அஞ்சல் செலவுகளைக் குறைக்கவும் எமக்கு உதவும்.

சமூக அக்கறையுடனும் பொறுப்புணர்வுடனும் எழுதப்படும் படைப்புகளையே பெரிதும் விரும்புகிறோம். படைப்புகளில் தேவைப்பட்டால் சிறு திருத்தங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. அதுகுறித்து இயன்றவரை படைப்பாளிகளுடன் கலந்தாலோசனை செய்யப்படும்.

இதழில் வெளிவரும் படைப்புகளின் கருத்துக்கள் அனைத்தும் ஆசிரியரின் கருத்துக்கள் அல்ல. எமக்கு உடன்பாடில்லாத கருத்துக்களையும் பொது உரையாடலின் பொருட்டும், அதன் மீதான விவாதங்களை நடத்தவதற்கு உதவுவதற்கென்றும் இதழில் இடம்பெறச் செய்கிறோம். படைப்புகளில் வெளிப்படும் கருத்துக்கள் அதனை எழுதியவர்களுடையதே.

படைப்புகள் படைப்பாளர்கள் எத்தகையவர்கள் என்பதையும், விமர்சனங்கள் வாசகர்கள் எத்தகையவர்கள் என்பதை இனங்காட்டும். எனவே, படைப்புகளின் மீதான விமர்சனங்களை வரவேற்கிறோம்.

படைப்புகளை அஞ்சலில் அனுப்புவர்கள் முழு வெள்ளைத் தாளில் ஒருபக்கம் மட்டும் தெளிவான கையெழுத்தில் எழுதியோ அல்லது தட்டச்சுச் செய்தோ அனுப்ப வேண்டும். பிரசுரிக்க இயலாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. எனவே படைப்புகளை அனுப்புகிறவர்கள் பிரதி எடுத்து வைத்துக்கொண்டு அனுப்பவும். படைப்புகள் அனுப்பிய செய்தியை குறுஞ்செய்தி மூலமோ அல்லது நேரில் அலைபேசியில் அழைத்தோ தெரிவிப்பது நல்லது. அது அஞ்சல்களை தவறவிடாமல் பெற்றுக்கொள்ள எமக்கு உதவும்.

கணினியைப் பயன்படுத்த அறிந்த படைப்பாளிகள் படைப்புகளை யுனிகோடு எழுத்துருவில் தட்டச்சு செய்து எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். கவிதைகள், படைப்புகள் மீதான விமர்சனங்கள் போன்ற சிறு படைப்புகளை எமது முகநூல் கணக்கின் செய்திப் பகுதி வழியாகவும் அனுப்பலாம்.

மனப்பூர்வமான நன்கொடைகளை மட்டும் வரவேற்கிறோம். நன்கொடைகளை அருகில் கொடுக்கப்பட்டுள்ள எமது வங்கிக் கணக்கிலும் செலுத்தலாம்.

■


# Nikaran

Private Circulation
Tamil Bi-Monthly
TASNA Regd.No.493/2015



P.Baskaran, M.A.,
3/806, MGR Nagar,
TNC Cross Road,
Alangulam – 626127
(Via) Rajapalayam,
Virudhunagar District,
Tamilnadu State.
Cell: 91 7871307773.

www.nikaran.com.

nikarantamil@yahoo.com.

facebook.com/nikarantamil


To Donate through Bank Account:

Name of the Account:
BASKARAN

Account No:
0790101401042

Bank Name:
CANARA BANK

Branch Name:
VIVEK NAGAR
BENGALURU

IFSC Code:
CNRB0000790


*முகவரி தமிழில்:*

***பா.பாஸ்கரன், எம்.ஏ.,***
***3/806, எம்.ஜி.ஆர். நகர்,***
***டி.என்.சி.கிராஸ் ரோடு,***
***ஆலங்குளம் - 626127,***
***(வழி) இராஜபாளையம்,***
***விருதுநகர் மாவட்டம்,***
***தமிழ்நாடு.***